வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.03.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 72 பக்கங்கள் : 12




## வெடுக்குநாறிமலை விவகாரம்

# நல்லூரில் நேற்று கண்டன போராட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 12

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூசை நிகழ்வை குழப்பும் விதமாகவும் - மத நிந்தனை செய்யும் விதமாகவும் செயல்பட்ட பொலிஸாரை கண்டித்தும் - 8 பேர் கைது செய்யப்பட்டமையை கண்டித்தும் - அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் போராட்டம் நடத்தப்பட்டது. 11

## மரதன் ஓடிய மாணவன் திடீர் மரணம்!

*திருக்கோவில், மார்ச் 12*

அம்பாறை - திருக்கோவிலில் மரதன் ஓடிய மாணவர் ஒருவர் மரணித்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தை சேர்ந்த விதுர்ஷன் என்ற 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று காலை மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட குறித்த மாணவன் போட்டி நிறைவுற்றதும் வகுப்பறைக்கு சென்றுள்ளார். இதன்போது வயிற்றுக்குள் கொழுவிப் பிடிப்பதாகக் கூறி, 11

## காலியில் துப்பாக்கிச் சூடு இரண்டு பேர் உயிரிழப்பு!

*கொழும்பு, மார்ச் 12*

காலியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு காலி - அம்பலாங்கொடை - கலகொட பகுதியில் உள்ள கடை ஒன்றின் மீதே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பலப்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## விமானப் படையில் இணைவதற்கு 250 தமிழ் இளைஞர் விண்ணப்பம்

*கொழும்பு, மார்ச் 12*

விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘வான் சாகசம் 2024’ கல்வி மற்றும் தொழில்நுட்ப கண்காட்சியின்போது, விமானப் படையில் சேர 250இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

விமானப் படையினர் மார்ச் 6 முதல் ‘வான் சாகசம்’ கண்காட்சியை நடத்தினர். இந்த கண்காட்சியைப் பார்க்க யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பெரும் சனத்திரளே குவிந்தது. கண்காட்சியை பார்க்க சென்ற பலரும், விமானப் படை நடத்திய 11

## ரமழான் இன்று ஆரம்பம்!

*கொழும்பு, மார்ச் 12*

புனித ரமழான் நோன்பு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கின்றது கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாத தலைப் பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று திங்கட்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. 11

## வலி.வடக்கில் 33 வருடங்களின் பின்னர் சொந்தமண்ணில் கால் பதித்த மக்கள்!



*யாழ்ப்பாணம், மார்ச் 12*

வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 67 ஏக்கர் காணிகள் நேற்று முன்தினம் காணி உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கப்பட்டன.

அவற்றுள் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணிகளுக்குள் செல்ல இராணுவத்தினர் நேற்று அனுமதி வழங்கியுள்ளனர்.

காங்கேசன்துறை தெற்கு 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும் மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட 11

## கடும் உச்சத்தில் வெப்பம்!

*கொழும்பு, மார்ச் 12*

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை தொடர்ந்தும் அதிகரித்து காணப்படுவதனால் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம் மாவட்டங்களிலும் மேல், வடமேல், தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் வெப்பநிலை தொடர்ந்தும் அதிகரித்த வண்ணம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பகுதிகளில் பணிபுரிபவர்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும் நிழலான பகுதிகளில் முடிந்தவரை ஓய்வெடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் 11

## தமிழர்மீதான தாக்குதல்களை வெளிநாடுகள் தடுக்க வேண்டும்

### அகத்தியர் சுவாமிகள் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 12*

வடக்கு, கிழக்கில் தமிழர்கள்மீதும் இந்து ஆலயங்கள்மீதும் தொடர்ந்தும் தாக்குதல்களைத் தடுத்த நிறுத்த அயல், வெளிநாடுகள் உதவிசெய்ய வேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய சிவராத்திரி தினத்தில் பொலிஸாரின் அடக்குமுறைகளை கண்டித்து நல்லூர் ஆதீன முன்றிலில் நேற்று திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது இந்தப் போராட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழர்கள்மீதும் அவர்கள் வழிபாட்டு இடங்கள்மீதும் தொடர்ந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. -நீதிமன்ற கட்டளையை மதிக்காத நாடாகவே எமது நாடு விளங்குகிறது. இதனை அருவருக்கத்தக்கதாகவே நாங்கள் உணர்கின்றோம். இத்தகைய நீதியைத்தான் நாங்கள் அடுக்கடுக்காக கண்டுகொண்டு இருக்கிறோம். இது ஒரு நாட்டுக்கு ஆரோக்கியமா 11

## ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடனான பேச்சில் தமிழ் அரசு கட்சி மாத்திரமே பங்கேற்பு!



*கொழும்பு, மார்ச் 12*

சர்வதேச நாணய நிதிய (ஐ. எம். எவ்.) பிரதிநிதிகளுடன் கலந்துரையாட எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் சுமந்திரன் எம். பி. மட்டுமே பங்கேற்றார். இந்தக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்ட நிலையிலேயே சுமந்திரன் பங்கேற்றார்.

எனினும், இந்தக் கூட்டத்தில் வேறு எந்த எதிர்க்கட்சியின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. 11

## இப்படியும் நடக்கிறது

இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் அரசியல் நடவடிக்கைகளின் பின்னால் புலம்பெயர் குழுக்கள் இருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

புலம்பெயர் நாடுகளில் இயங்கும் பல்வேறு குழுக்களும் தாயகத்தில் தாம் எதையாவது செய்து கொண்டிருப்பதாகக் காட்டவேண்டிய தேவை அவர்களுக்கு இருப்பதால், தத்தமக்கு முடிந்தவாறு தாயகத்திலுள்ள சிலரை பயன்படுத்தி எதையாவது செய்துகொண்டிருக்கின்றனர்.

இதனால், தாயகத்தில் எத்தகைய அரசியல், சமூக செயல்பாடுகளை யார் முன்னெடுத்தாலும், அவர்கள் பின்னால் யார் இருக்கிறார்கள் என்ற ‘சத்திர சிக்கிச்சை’யை செய்வது வழக்கமாகி வருகின்றது.

ஒன்றில் புலம்பெயர் குழுக்கள் அல்லது வெளிநாட்டு உளவுத்துறையினர் பின்னால் இருந்து இயக்குவதாக எந்தவித ஆதாரமும் இன்றி முத்திரைகுத்தி வருகின்றனர்.

இவ்வாறு எந்தவித பொறுப்புமின்றி கூறுவதை சில ஆய்வாளர்கள்கூட இப்போது சர்வ சாதாரணமாக செய்யத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் ஈழத்தமிழர் பிரச்னையை மையப்படுத்தி சில நிகழ்வுகள் நடைபெற்றமையை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

லண்டனிலிருந்து சென்றிருந்த சிலர் இந்தப் புதுடில்லி சந்திப்புகளுக்குப் பின்னால் இருந்தனர் என்றும் அப்போது பேசப்பட்டது.

அதன் பின்னர், திடீரென்று தாயகத்திலிருந்து சில அரசியல்வாதிகளும் அரசியல் செயல்பாட்டாளர்களும் புலம்பெயர் நாடுகளிலிருந்து சில செயல்பாட்டாளர்களும் புதுடில்லி சென்று ஈழத் தமிழர் விவகாரத்தை ‘சந்தைப்படுத்த’ முயன்றனர்.

இந்தப் பயணத்தில் நமது எம். பிக்களான சி. வி. விக்னேஸ்வரன், சி. சிறீதரன் ஆகியோரும் முன்னாள் எம்.பிக்களான சிறிநேசன், சிவாஜிலிங்கம் ஆகியோரும் இணைந்திருந்தபோதிலும் அவர்கள் எதற்காக போகிறோம், யாரை சந்திக்கப் போகிறோம் என்ற விபரங்கள் தெரியாமலே அங்கு சென்றிருந்தனர்.

இந்தப் புதுடில்லி அரசியல் நகர்வுகளின் பின்னால் பிரிட்டனை சேர்ந்த புலம்பெயர் தமிழ் பெண் ஒருவரும் மற்றும் சிலரும் இருக்கின்றனர் என்று தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டுவந்தது.

இந்நிலையில், அந்தப் பிரமுகர்களின் ஏற்பாட்டில் லண்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்று பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது.

தமிழ் அரசு கட்சியின் ஐக்கிய இராச்சிய மன்றம் என்ற பெயரில் ஒன்றுகூடிய சிலர் இதற்காக நிர்வாக சபை ஒன்றையும் அமைத்திருக்கின்றனர்.

‘ஐ. ரி. ஏ. கே. போரம் யு.கே.’ (ITAK Forum UK) என்ற பெயரில் ஒன்றுகூடிய இவர்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ இலச்சினையையும் பயன்படுத்தியிருக்கின்றனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, இலங்கையில் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் ‘சிக்கல்பட்டு’ நிற்க, தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் அந்தக் கட்சிக்கு எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் இப்போது பிரிட்டனில் கிளை தொடங்கியிருக்கின்றனர்.

ஏற்கனவே தமிழ் அரசு கட்சிக்கு உத்தியோகபூர்வ கிளை ஒன்று லண்டனில் இயங்கிவருவது மாத்திரமன்றி அவர்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படாமல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் போராளிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்களாக செயல்பட்டவர்கள்.

இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவரோடு லண்டனிலுள்ள ஊடகவியலாளர் ஒருவர் பேசியபோது, அவர் சொன்னதுதான் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது.

கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவாகிய மறுநாளே, இனி தாங்கள்தான் தமிழ் அரசு கட்சியின் பிரதிநிதிகள் என்றும் கட்சி இனி தங்களுடையதே என்றும் சொல்லியிருக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் அரசின் தலைவராக சிறீதரன் தெரிவாகியதிலிருந்து கட்சி நீதிமன்றம்-வழக்கு என்று அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்க, புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் அரசுக் கட்சிக்கு இதுபோன்ற சிக்கல்களை சிலர் ஏற்படுத்துவது மேலும் சிக்கல்களையே ஏற்படுத்தும்.!

**- ஊர்க்குருவி.**

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

## 2,873 பட்டங்கள், 46 தங்கப் பதக்கங்கள், 9 புலமைப் பரிசில்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது. பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விபரிப்பு ஒன்று நேற்று திங்கட்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழாத் தொடர்பான விவரங்களை வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு :

பட்டமளிப்பு வைபவமானது, பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானதாக அமைவதுடன், ஒவ்வொரு பட்டதாரியினதும் வாழ்க்கையில் மிகவும் மறக்க முடியாத நிகழ்வாகவும் இடம்பிடிக்கின்றது. இம்முறை நடைபெறும் பட்டமளிப்பு விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் பொன்விழா நிகழ்வுகளின் முக்கிய நிகழ்வாக இடம்பெற இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

38ஆவது பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்ள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப்பதக்கங்களையும், புலமைப்பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

இப்பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப் பீடம், பொறியியற் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக்கற்கைள் பீடம், சித்தமருத்துவ அலகு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 441 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து எட்டு உள்வாரி மாணவர்களுக்கும், 330 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 94 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 441 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஒருவரும், முது மெய்யியல்மாணிப் பட்டத்தை 9 பேரும், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞான மாணிப் பட்டத்தை ஒருவரும், பண்பாட்டுக் கற்கைகளில் முதுமாணி பட்டத்தை 33 பேரும், கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி பட்டத்தை 36 பேரும், தூய சக்தி தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை ஒருவரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 73 பேரும், தமிழில் முதுமாணிப்பட்டத்தை 40 பேரும், கல்வியில் முதுமாணிப் பட்டத்தை 195 பேரும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தை 28 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 24 பேரும் பெறவுள்ளனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 29 பேர் மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணிப் பட்டத்தையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 94 பேர் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 20 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 168 பேர் விஞ்ஞானமாணிப் (பொது) பட்டத்தையும், 24 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 25 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பெறவுள்ளனர்.

இவர்களுடன் விவசாய பீடத்தைச் சேர்ந்த 96 பேர் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும், பொறியியற் பீடத்தைச் சேர்ந்த 119 பேர் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத் தையும், தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த 97 பேர் உயிர்முறைமைகளில் சிறப்பு தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 80 பேர் பொறியியலில் சிறப்பு தொழில்நுட்பமாணி பட்டத்தையும் பெறவுள்ளனர்.

அத்துடன், முகாமைத்துக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாக மாணிப் பட்டத்தை 276 பேரும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 7 பேரும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 81 பேரும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை இருவரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன் கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 398 பேரும், பொதுக் கலைமாணிப் பட்டத்தை 12 பேரும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 21 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்திலிருந்து தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 38 பேரும், மருந்தகவியல் சிறப்புமாணிப் பட்டத்தை 49 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 60 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 15 பேர் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 28 பேர் விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) பட்டத்தையும், ஒருவர் விஞ்ஞானமாணி (சூழல் விஞ்ஞானம்) பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். வியாபாரக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 42 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவ மாணிப் பட்டத்தையும், 4 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 16 பேர் வியாபார முகாமைத்துவ மாணி (பொது) பட்டத்தையும், 5 பேர் சந்தைப்படுத்தலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 46 பேர் கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 15 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 13 பேர் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து 66 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற இருக்கின்றனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் தொலைதூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 288 பேர் கலைமாணி சிறப்புப் பட்டத்தையும், 42 பேர் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

மேலும், 3 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் கணினி விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழையும், 31 பேர் வங்கியியல் மற்றும் நிதியியலில் தகைமைச் சான்றிதழையும், 24 தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச் சான்றிதழையும், 34 பேர் நுண்நிதியியலில் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழையும் பெறுவது உறுதிப்படுத்தப்படவுள்ளது.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கை நெறிகளுக்குமாக 46 தங்கப்பதக்கங்களும், 09 புலமைப்பரிசில்களும், 48 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் கலைப் பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கத்தினை பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவுள்ளனர்.

இப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரை பங்குனி மாதம் 20ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை பி.ப 3.45 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருக்கின்றன.

(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.03.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மாசி 29

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒன்றுபட்டால் உண்டு அரசியல்

ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்னும் அடிப்படையிலான முதலாவது மக்கள் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருக்கின்றது. ‘மக்களுடைய மனு’ - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவால் குறித்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தலையும் எதிர்கொண்டது போன்று இந்தத் தேர்தலை எதிர்கொள்ள முடியாது - ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும். இதன்மூலம் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் - அவர்களால் தீர்மானகரமான காலகட்டங்களில் தீர்மானகரமான முடிவை எடுக்க முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும் - அது நடைபெற வேண்டும் என்றால் வழமைபோல் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியாது - வாக்களிக்கக்கூடாது. குறித்த கூட்டத்தின் இலக்கு இதுவாகவே இருந்தது. கூட்டத்தில் பங்குகொண்டிருந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கொள்கை ரீதியாக சிவில் சமூக குழுவின் நிலைப்பாட்டை ஆதரித்திருக்கின்றனர். ஆனால், இந்த விடயத்தை சாத்தியப்படுத்த வேண்டும் என்றால் அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும் என்னும் கருத்து அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு ஒரு காரியத்தை முன்னெடுக்குமா? அது சாத்தியமா?

மக்களின் நலன் மட்டுமே முதன்மையானது என்னும் அடிப்படையில் சிந்தித்தால் இது சாத்தியமற்ற விடயமல்ல - ஆனால், மக்களின் நலனை விடவும் தங்களின் சொந்த நலன்கள் முக்கியமென்று சிந்தித்தால் இது நிச்சயமாக சாத்தியமற்ற விடயம்தான். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு முற்றிலும் செயலிழக்கும் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் மக்கள் மத்தியில் ஒன்றுபட்டு நிற்கும் உணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. ஒன்றில் கட்சிகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு மக்களுக்கு நம்பிக்கையை வழங்க வேண்டும். இல்லாவிட்டால், மக்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வால் கட்சிகள் மக்களின் உணர்வுகளுக்கு பின்னால் அணி வகுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். கட்சிகள் தாங்கள் விரும்பியவாறு தமிழ் மக்களை கையாளலாம் என்னும் எண்ணத்தை இல்லாமலாக்க வேண்டும்.

சிங்கள தலைவர்கள் தமிழ் மக்களின் கட்சிகளை ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை - இதேபோன்று, இலங்கைத் தீவில் தலையீடு செய்யும் சர்வதேச தரப்புகளும் தமிழ் மக்களை தேவையான மக்கள் கூட்டமாக நோக்குவதாகத் தெரியவில்லை. எவருக்கும் தேவையில்லாத மக்கள் கூட்டமொன்றுக்கு உதவுவதற்கு எவருமே வரப்போவதில்லை. இது அடிப்படையில் கொடுத்து - வாங்கும் உலகம். கொடுப்பதற்கு எதுவுமில்லாதவர்கள் எவருக்கும் தேவைப்படப் போவதில்லை. எனவே, தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் தவிர்க்க முடியாத மக்கள் கூட்டமென்னும் நிலைமையை தமிழ் மக்கள்தான் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறான நிலைமையை ஏற்படுத்துவதற்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புகளையும் தமிழ் மக்கள் புத்திக்கூர்மையுடன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சூழ்நிலைகளை வெற்றிகரமாகக் கையாளும் திறன் கொண்ட இனம் ஒன்றால் மட்டும்தான் அது எதிர்கொள்ளும் வரலாற்று நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியும். பலவீனமான சமூகங்கள் - வரலாற்று நெருக்கடிகளால் அனைத்தையும் இழந்து, அதன் தனித்துவத்தை மற்றவர்களின் காலடிக்கு கொண்டு செல்லும். தமிழ் சமூகத்தின் இன்றைய நிலையும் இதுதான். கல்வியில் உயர்ந்தவர்கள் என்று மார்தட்டிக்கொண்ட ஓர் இனம் எவராலும் உற்று நோக்காத சமூகமாக வீழ்ச்சியுற்றிருக்கின்றது.

இதற்கு தமிழ் சமூகத்துக்கு தலைமை தாங்கியவர்களே முதன்மையான காரணம். வெறும் உணர்ச்சி அரசியலுக்குள் தமிழ் தலைமுறைகளை தள்ளிவிடுவதையே, ஒரு பெருமையாக கருதிக்கொள்பவர்களே, தமிழ் மக்களை வழிநடத்தினர். இந்த நிலைமையை இனியாவது மாற்றவில்லை என்றால் அதன் பின்னர் தமிழ் மக்கள் வடக்கு -கிழக்கில் வாழ்வர். ஆனால் - அனைத்திலும் பார்வையாளராக இருக்கும் மக்களாகவே அவர்கள் இருக்க முடியும்.

வீழ்ச்சியுற்றிருக்கும் தமிழ் ஜனநாயக அரசியலுக்கு புத்துணர்ச்சியூட்ட வேண்டும் என்றால் இந்த ஜனாதிபதி தேர்தலை புத்திசாதுர்யமாக பயன்படுத்துவதைத் தவிர, வேறு தெரிவுகள் தமிழ் மக்களுக்கு முன்னால் இல்லை. இது சாத்தியமா? - என்னும் கேள்வி அவசியமற்றது - ஏனெனில், தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டால் அனைத்தும் சாத்தியம்தான். அவர்கள் ஒன்றுபட்டேயாக வேண்டும் -ஒன்றுபட்டால் மட்டும்தான் தமிழர்கள் இலங்கைத் தீவில் ஓர் அரசியல் சமூகமாக நிமிர முடியும்.

# வடக்கு சுகாதாரசேவையில் ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 12*

வடக்கு மாகாணத்தில் ஆரம்ப மருத்துவப் பிரிவுகளை வார இறுதி நாட்களில் இயக்கவும் வட மாகாண சுகாதார சேவையில் நிலவும் ஆளணியை நிரப்பவும் சுகாதார அமைச்சின் செயலர் மருத்துவர் மஹிபால அதற்குச் சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலர் மஹிபால மற்றும் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன ஆகியோர் வடக்கு மாகாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்ததுடன் வடக்கிலுள்ள சில மருத்துவமனைகளுக்கும் விஜயம் செய்தனர். அத்துடன் வடக்கிலுள்ள மருத்துவ அதிகாரிகளுடன் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் கருத்து தெரிவித்த வடமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி-

வட மாகாணத்தில் உள்ள ஆரம்ப மருத்துவ சுகாதார அலகுகளை மேம்படுத்தும் முகமாக நான்கு மருத்துவமனைகளைத் திறப்பதற்கான அனுமதியை வழங்கமுடியும் என சுகாதார அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

மேலும், ஆரம்ப சுகாதாரப் பிரிவுகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நோயாளர் கிளினிக்கை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான ஆளணியை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்

பாளர்களுக்கு வழங்குவதன் மூலம் சேவையை வினைத்திறனாக எதிர்காலத்தில் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நிலவுகின்ற பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆளணிக்குரிய அனுமதியை வழங்குவதாகவும் அமைச்சின் செயலர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும், சில மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கான ஆளணி அதிகமாக தேவைப்படுகின்றது. அவற்றை வழங்குவதாகவும் சுகாதார அமைச்சின் செயலர் உறுதியளித்துள்ளார்.

வட மாகாணத்தில் 140 குடும்பநல சேவை உத்தியோகத்தர்களே உள்ளனர். எனவே, எதிர்காலத்தில் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும்போது வடக்கு மாகாணத்துக்கு அதிகளவானோரை நியமிக்க இணக்கம் காணப்பட்டது. தாதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு சுகாதார அமைச்சின் செயலர் இணங்கினார்-என்றார்.

(அ)

## தமிழ்நாட்டு பேச்சாளரின் இன்றைய உரைகள்

*யாழ்ப்பாணம், மார்ச் 12*

தமிழ்நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள பிரபல செயலூக்க பேச்சாளர் சரண்யா ஜெயக்குமார் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் உரையாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் முற்பகல் 10 மணிக்கு ‘சுற்றுச்சூழலை காப்போம்’ என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இதைத் தொடர்ந்து இன்று மதியம் 1.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ‘ஊழலற்ற எதிர்காலம்’ என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

(ஐ)

## 24 மணித்தியாலங்களில் 653 பேர் கைது

*கொழும்பு, மார்ச் 12*

நேற்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் யுக்திய சுற்றிவளைப்பில் 653 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 586 பேரும் குற்றத் தடுப்பு பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 67 சந்தேக நபர்களும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா போதைவில்லைகள் உள்ளிட்ட பல போதைப்பொருட்களையும் இந்த சுற்றிவளைப்பின் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)

## லொறி மோதி இளைஞன் பலி

*கொழும்பு, மார்ச் 12*

சிலாபம், திகன்வெவ பகுதியில் லொறியொன்று மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.


சிலாபம் - திகன்வெவ மொரகலை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்தார்.

அதிவேகமாக வந்த குறித்த லொறி வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் குறித்த இளைஞன் மீது மோதியுள்ளதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் இளைஞன் தூக்கி வீசப்பட்டு சிறிய பள்ளத்தில் விழுந்ததாகவும், லொறியின் இரண்டு சக்கரங்களும் இளைஞனின் மார்பின் மீது ஏறியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 12 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 29
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரிதியை




**மேடம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளி வட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புகழ் கௌரவம் உயரும்நாள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வீடு, வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். மேலதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**மீனம்**
புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

# இலங்கைக்கு கடத்தவிருந்த போதைப் பொருள் சிக்கியது

## - 408 கோடி பெறுமதியானவையாம் -

*புதுக்கோட்டை, மார்ச் 12*

இலங்கைக்கு கடத்துவதற்காக வைத்திருந்த 100 கிலோ ஹசிஸ் போதைப் பொருள், 874 கிலோ கஞ்சா என சுமார் 110 கோடி இந்திய ரூபாய் - இலங்கை மதிப்பில் சுமார் 408 கோடி ரூபாய் போதைப் பொருளை தமிழ்நாடு சுங்கத்துறை கைப்பற்றியுள்ளது.

புதுக்கோட்டை - அறந்தாங்கி அருகே உள்ள இறால் பண்ணையில் இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்த போதைப்பொருட்கள் படகுகள் மூலம் இலங்கைக்கு கடத்தப்படவிருந்த நிலையில் இதனை அதிகாரிகள் கைப்பற்றினர்.

(ஐ)

# தி. மு. கவுடன் கூட்டணி அமைத்தது எதற்காக?

## - கமல் ஹாசன் விளக்கம் -

*சென்னை, மார்ச் 12*

தி. மு. க. கூட்டணியில் இணைந்தது ஏன்? என மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் விளக்கமளித்துள்ளார். மக்கள் நீதி மய்யம் கட்சியை தொடங்கியபோது, தி. மு. க, அ. தி. மு. கவுடன் கூட்டணி இல்லை என உறுதிபட கமல்ஹாசன் தெரிவித்திருந்தார்.

தி. மு. கவுடன் கூட்டணியை கமல்ஹாசன் உறுதி செய்தமையை அடுத்து இந்த விடயம் விமர்சனத்துக்கு உள்ளாகியது. இந்த நிலையிலேயே அவர் விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவின் பன்முகத்தன்மைதான் அதன் தனித்துவம் என நான் நம்புகிறேன். தற்போதைய நிலை என்பது ஓர் அவசர நிலை. இது, தமிழகத்துக்கும் தேசத்துக்கும் பயனுள்ளதாக அமைய வேண்டும்.

எதிர்வாத சக்திகளுக்கு இது கைகூடி விடக்கூடாது என்பதற்காக நாங்கள் எடுத்திருக்கும் முடிவு. இந்த நேரத்தில் எந்த கட்சியில் இருந்தாலும் அனைவருமே சகோதரர்கள்தான். எதிர்க் கட்சியாக இருந்தாலும் என்னுடைய சகோதரர்கள்தான். தேச நலனின் முக்கியத்துவம் கருதி நான் சிலவற்றை தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். தேசத்துக்காக நாம் அனைவரும் ஒரே மேடையில் அமர வேண்டும். அதுதான் என்னுடைய அரசியல் - என்று கூறியுள்ளார். (ஐ)

# சிவகங்கை தொகுதி கார்த்திக்கு

*காரைக்குடி, மார்ச் 12*

சிவகங்கை மக்களவைத் தொகுதியில் கார்த்தி சிதம்பரம் மீண்டும் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் தீர்மானம் நிறைவேற்றினர்.

மாவட்ட காங்கிரஸ் கூட்டம் காரைக்குடியில் நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், தி. மு. க. கூட்டணியில் சிவகங்கை தொகுதியை காங்கிரஸுக்கு கேட்டுப் பெற வேண்டும். இந்தத் தொகுதியில் கார்த்தி சிதம்பரம் மீண்டும் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

# பிரதமர் மோடி 3 நாள் பயணமாக தமிழகம் வருகிறார்

*சென்னை, மார்ச் 12*

பிரதமர் மோடி எதிர்வரும் மார்ச் 15, 16, 18ஆம் திகதிகளில் தமிழகத்தில் பிரசாரம் செய்யவுள்ளார். 15ஆம் திகதி சேலத்திலும் 16ஆம் திகதி கன்னியாகுமரியிலும் 18ஆம் திகதி கோவையிலும் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்.

கடந்த மார்ச் 4ஆம் திகதி சென்னை வந்த பிரதமர் மோடி பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார். அதற்கு முன்னதாக, தமிழகம் வந்த பிரதமர் மோடி திருநெல்வேலியில் நடந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

இந்நிலையில், 3வது முறையாக வரும் மார்ச் 15ஆம் திகதி பிரதமர் மோடி தமிழகம் வருகிறார். பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில், பிரதமர் மோடியின் தமிழக வருகை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# தேர்தல் வரும்போதே பிரதமருக்கு தமிழர்கள்மீது பாசம் பொங்குகிறது

## முதல்வர் ஸ்டாலின் சாடல்

*தருமபுரி, மார்ச் 12*

"பிரதமரின் சுற்றுப் பயணத்தை வெற்று பயணமாகதான் தமிழக மக்கள் பார்க்கிறார்கள். தேர்தல் வரும்போது மட்டும் பிரதமருக்கு தமிழக மக்களின் மீது பாசம் பொங்குகிறது." என்று தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் பிரதமரை சாடியுள்ளார்.

தருமபுரியில் பல்வேறு நலத் திட்ட பணிகளை நேற்று தொடங்கி வைத்து முதல்வர் மு.க .ஸ்டாலின் உரையாற்றினார். இதன்போது, அவர் தெரிவித்தவை வருமாறு,

"மத்திய பாஜக அரசு மாநிலங்களை சமமாக நடத்துவது இல்லை. மத்திய அரசு மாநிலங்களையே அழிக்க நினைக்கிறது. மாநிலங்களை அழிப்பதன் மூலமாக நமது மொழியை, இனத்தை, பண்பாட்டை அழிக்கப் பார்க்கிறது மாநில அரசின் நிதி ஆதாரத்தை மத்திய அரசு பறிக்கிறது. மாநில அரசின் ஒட்சிசனான வரி வருவாயை நிறுத்த முயற்சிக்கிறது மத்திய அரசு. மத்திய அரசுக்கு வருவாய் என்பது மாநில அரசு கொடுப்பதுதான்.

மக்களாகிய நீங்கள் எங்களுடன் இருக்கிறீர்கள். மக்களும் - அரசும் - திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரே குடும்பமாக செயல்பட்டு வருகின்றன. இதைத்தான் குடும்ப ஆட்சி என்று சொல்கிறார்கள். தமிழகத்தில் நடப்பது கோடிக்கணக்கான மக்களின் நலனுக்காக நடக்கிற ஆட்சிதான்" - என்றார். (ஐ)

# மீனவர்கள் பிரச்னைக்கு நிரந்த தீர்வு காணுங்கள்!

## பா. ம. க. தலைவர் வலியுறுத்து

*சென்னை, மார்ச் 12*

40 ஆண்டுகளாகத் தொடரும் சிங்களக் கடற்படையினரின் அத்துமீறல்களைத் தடுக்கவும், மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காணவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று - பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எக்ஸ் தளத்தில் பதிவிட்டவை வருமாறு,

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினத்தை சேர்ந்த மீனவர்கள் 22 பேரை சிங்களக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. அவர்களின் 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தங்களுக்கு உரிமையுள்ள இடங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை சிங்கள கடற்படையினர் அத்துமீறி கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இலங்கை அரசு இந்தியாவிடமிருந்து அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொள்கிறது. இன்னொருபுறம் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து அத்துமீறல்களை கட்டவிழ்த்து விடுகிறது. இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை சிதைத்துக் கொண்டிருக்கிறது. இது இந்தியாவின் இறையாண்மைக்கு விடப்படும் சவாலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ரணில் தனித்துவிடப்படுவார்!

## அஜித் பி பெரேரா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 12

**“ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்துவிடப்பட்டுவிடுவார்” என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**



பண்டாரகம பகுதியில் நடைபெற்ற மக்கள் சக்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தொழிற்துறையை இல்லாமல் செய்துள்ளார். வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களுக்கு வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளார்.

மின்கட்டணத்தை செலுத்த முடியாத நிலைமைக்கு மக்களை அவர் தள்ளியுள்ளார். சிறிய பிள்ளைகள் முதற்கொண்டு பெற்றோர்வரை அனைவரையும் பட்டினியால் வைத்துள்ளார். இந்த நிலையில் தேர்தல் ஒன்று இடம்பெற்றால் ரணிலுடன் யாரும் இருக்க மாட்டார்கள். அவருடன் யார் உள்ளார்கள்? குடு லன்சாவும், நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பிரசன்ன ரணதுங்கவும்தான் உள்ளார்கள்.

அப்படியான குழுவினர் தான் ரணிலுடன் உள்ளார்கள். இவர்களால் ரணிலை வெல்ல வைக்க முடியுமா? நாம் ஒருபோதும் ரணிலுடன் இணைய மாட்டோம். அவருடன் இணைவதால் எமக்கு என்ன நன்மை கிடைத்துவிடப் போகிறது? ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் எல்லாம் ரணிலுடன் இல்லை.

இந்த நாட்டின் எதிர்க்காலத்திற்காகவும், பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி தேவைப்படுகிறது. அடுத்த 5 மாதங்களில் எமது வெற்றி உறுதி செய்யப்படும்-என்றார். (அ)

# வெளிநாடு அனுப்புவதாக மோசடி; ஊரெழு பகுதி பெண் யாழில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 12

வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி 60 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு பகுதியை சேர்ந்த 27 வயதான யுவதி ஒருவரே யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பெண்ணின் வங்கிக் கணக்கில் கோடிக்கணக்கான ரூபாய் பண பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண நகர் பகுதியை அண்மித்த பகுதியில், வெளிநாடு செல்பவர்களுக்கான தொடர்பகம் ஒன்றை ஆரம்பித்து வெளிநாடு செல்ல விரும்புவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கல், விசா தொடர்பிலான தெளிவூட்டல்கள் போன்ற சேவைகளை அந்த பெண் கட்டணம் பெற்று வழங்கி வந்துள்ளார்.

அவரை நம்பி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களைச் சேர்ந்தவர்களும் பணத்தை வழங்கி வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் சுமார் 60 இலட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார்.

பணத்தை வழங்கியவர் தனது வெளிநாட்டு பயண ஏற்பாடுகள் தாமதமாகி வந்தமையால், அப்பெண் மீது சந்தேகம் கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அப்பெண்ணை கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது அவரது வங்கிக் கணக்கு இலக்கம் ஊடாக சுமார் 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான பண பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதனை கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட இதர பகுதிகளில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் முகவர்களாக செயற்படும் மோசடியாளர்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமக்கான முகவர்களாக சிலரை நம்பிக்கைக்காக அமர்த்தி அவர்கள் ஊடாக பெரும் பணம் மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# வெலிக்கடை சிறையில் சர்வதேச மகளிர் தினம்



கொழும்பு, மார்ச் 12

வெலிக்கடை சிறைச்சாலை மகளிர் பிரிவில் சர்வதேச மகளிர் தின விழா இடம்பெற்றது.

வெலிக்கடை சிறைச்சாலை பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான கண் மற்றும் செவித்திறன் மருத்துவ மனைகள், மனோபாவ அபிவிருத்தி நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகள், விரிவுரைகள் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பெண் கைதிகளின் மனப்பான்மை மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சிறைச்சாலை ஆய்வு வாரியம், ஆசிய குற்றத்தடுப்பு அறக்கட்டளை மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை துணைக் குழு ஆகியவற்றின் ஆதரவுடன் வெலிக்கடை சிறைச்சாலை மறுவாழ்வுத் திணைக்களத்தினால் இந்த கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறை ஆணையர் (செயல்பாடுகள் மற்றும் புலனாய்வு) காமினி பி. திஸாநாயக்க, சிறைச்சாலைகள் ஆணையாளர் (புனர்வாழ்வு) ஜகத் விரசிங்க, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் பாராளுமன்ற ஒருங்கிணைப்பு அலுவல்கள் செயலாளர் பிரேமலால் எல்பிட்டிய, ஒருங்கிணைப்புச் செயலாளர் லக்ஷ்மன் காமினி, சிறைச்சாலை உபகுழு உறுப்பினர்கள் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதனுடன், பெண்கள் பிரிவுகளைக் கொண்ட ஒவ்வொரு சிறையிலும் பெண் கைதிகளுக்காக பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. (அ)

# நாணய நிதியத்துடன் பேசுவது எதிர்க்கட்சியின் பொறுப்பாகும்

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 12

நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இவ்வேளையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு அனைவரது கருத்துக்களையும் செவிமடுத்து அதன்படி செயற்படுவது எதிர்க்கட்சிகளின் பொறுப்பு என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல வண்டல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்



தின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக நடைபெறவுள்ள கலந்துரையாடலில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கமாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியிருந்தார்.

அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் செயலாளர் திசத் டி.பி. விஜயகுணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதன்போது, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைக்குமாறு எதிர்க்கட்சிகள் பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதிலும் அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண் ஒருவரை தீ வைத்து எரித்து கொன்றவர் கைது

கொழும்பு, மார்ச் 12

பெண்ணொருவரை தீ வைத்து எரித்து படுகொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொரட்டுவை - கட்டுகுருந்த பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி, எகொடஉயன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றில் நுழைந்து பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் எகொடஉயன பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எகொடஉயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கடலில் நிகழவிருந்த அனர்த்தம் காப்பாற்றப்பட்ட வெளிநாட்டவர்

கொழும்பு, மார்ச் 12

பெந்தர கடற்கரையில் அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட வெளிநாட்டுப் பெண், அவரது குழந்தை மற்றும் வெளிநாட்டுப் பிரஜை ஆகியோரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் பின்புறம் உள்ள கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்தபோது, அலையில் அடித்துச் செல்லப்பட்டனர். அப்போது, அவர்கள் உதவி கோரி சத்தம் எழுப்பியதால், உயிர்காக்கும் வீரர்கள் தண்ணீரில் குதித்து அவர்களை காப்பாற்ற முயன்றனர்.ஆனால் அலைகள் அதிகரித்ததால் அருகில் இருந்த அளுத்கம தியக்காவ நீர் விளையாட்டு சங்கத்தைச் சேர்ந்த நிரோஷன் பெர்னாண்டோ மற்றும் தரிந்து மற்றும் லாலுனா நீர் விளையாட்டு சங்கத்தைச் சேர்ந்த சாமோதா ஆகியோர் ஜெட் ஸ்கை உதவியுடன் விரைவாக அவர்கள் அருகில் சென்றனர். ஆர்ப்பரித்த அலைகளின் மத்தியில் அவர்களை கரைக்கு அழைத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்பின் வெளிநாட்டவர்களுக்கு முதலுதவி அளிக்க, உயிர்காக்கும் படையினர் ஏற்பாடு செய்தனர். (அ)

# காபந்து அரசை நிறுவி ஜனாதிபதித் தேர்தல்?

**ரணில் வகுக்கும் வியூகம்**

கொழும்பு, மார்ச் 12

**பாராளுமன்றத்தைக் கலைத்துக் காபந்து அரசாங்கத்தை அமைத்து ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமான சட்டத்தரணிகளிடம் ஆலோசனை பெற்றுவருவதாக அறியமுடிகிறது.**

**பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டுமென மகிந்த ராஜபக்ச தரப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் ரணில் இவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்கிறார் என கூறப்படுகிறது.**

பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டுமென ராஜபக்ச தரப்பு அழுத்தம் கொடுத்திருந்தபோதும் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க விரும்புகிறார்.

இதனாலேயே ராஜபக்சவுடனான உறவைத் தொடர முடியாத இக் கட்டான சூழல் ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது என கூறப்படுகின்றது.

இப்பின்னணியிலேயே பாராளுமன்றத்தைக் கலைத்துக் காபாந்து அரசாங்கம் ஒன்றை அமைத்த பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ரணில் திட்டமிட்டுவருகிறார் என கூறப்படுகின்றது.

இது பற்றிய சட்டச்சிக்கல்கள் குறித்துத் தனக்கு நெருக்கமான சட்டத்தரணிகளுடன் ரணில் கலந்துரையாடியிருக்கிறார்.

காபாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது என்றால், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை ரணில் அறிவிப்பார் என்றும் மற்றுமொரு தகவல் கசிந்துள்ளது. (அ)

## துப்பாக்கி ரவைகள், போதைப்பொருள் வைத்திருந்தவர் தெஹிவளையில் கைது

கொழும்பு, மார்ச் 12

பாதாள உலக குழுவினர் என சந்தேகிக்கப்படும் ரி-56 துப்பாக்கிக்குரிய 16 தோட்டாக்கள் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து சந்தேக நபர் வெளியே செல்லும் போது அவரை சோதனையிட்டு இவற்றைக் கைப்பற்றியதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து தோட்டாக்களுக்கு மேலதிகமாக 3 கிலோ கஞ்சா 416 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது வீதி சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேக நபர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டபோது இவர் கைது செய்யப்பட்டார். (அ)

## இராணுவ வாகனம் மோதி வயோதிப மாது படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

இராணுவ வாகனம் மோதியதில் வயோதிப பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இராணுவ வாகனமும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்கு உள்ளாகின.

விபத்தில் அப்பகுதியை சேர்ந்த சிதம்பரப்பிள்ளை வசந்தாதேவி (வயது 60) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு , யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## பிரித்தானியாவில் இருந்து இலங்கை வந்தவர் மரணம்

கொழும்பு, மார்ச் 12

பிரித்தானியாவில் இருந்து இலங்கை வந்த ஒருவர் திடீர் மரணமடைந்துள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

அநுராதபுரம் நகரிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த குறித்த நபர் 8ஆம் திகதி உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

84 வயதான அவர் அனுராதபுரம் ஹரிச்சந்திர மாவத்தையில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

விடுதியில் தங்கியிருந்த போது ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக கடந்த 8 ஆம் திகதி அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இரவு 10.30 மணியளவில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

## குடு சலிந்துவுக்கு 25 ஆம் திகதி வரை மறியல்!

கொழும்பு, மார்ச் 12

போதைப்பொருள் வலையமைப்பை சேர்ந்தவரும் குற்றப் புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வருமான குடு சலிந்து என்பவரை இம் மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை இவர் பாணந்துறை பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே நீதிவான் சம்பிக்க ராஜபக்ஷ இவ்வாறு உத்தரவிட்டார். (அ)

## உத்தியோகபூர்வமற்ற நீதவானின் சட்டவிரோத செயலுக்கு அபராதம்!

கொழும்பு, மார்ச் 12

சிறிய தொகையை அபராதமாக விதித்து சட்டவிரோதமான முறையில் ஒருவரை விடுவித்த வழக்கு தொடர்பில் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வமற்ற நீதவானாக கடமையாற்றிய சட்டத்தரணிக்கு எதிராக நீதிச் சேவை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தனியார் மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளராக செயற்பட்ட நபருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையொன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவரிடம் அதிக கட்டணம் வசூலித்ததாக தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, குறித்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய் தது.

எவ்வாறாயினும், வழக்கு விசாரணையின் போது உத்தியோகபூர்வமற்ற நீதவானாக கடமையாற்றிய நிமாலி ஏக்கநாயக்க, உரிய சட்ட விதிகளை பின்பற்றாமல் இந்த அபராதத்தை விதித்துள்ளதாக வழங்கியுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

குறித்த வழக்கில் தனியார் வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையை கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாளிகாகந்தை நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மற்றும் முறைப்பாட்டாளர் நியமிக்கப்பட்ட திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமை குறித்து பாதிக்கப்பட்ட தரப்பினர் விசாரித்துள்ளனர்.

அதன்போது, கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி நிரந்தர நீதவான் விடுமுறையில் இருந்த வேளையில் நகர்த்தல் பத்திரம் மூலம் பிரதிவாதியான பணிப்பாளர் சார்பில் முன்னிலையான பிரதிநிதி, குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் அவருக்கு 25,000 ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், வழக்கு தொடுநர் அல்லது பாதிக்கப்பட்ட தரப்பினர் இல்லாத பட்சத்தில் 25,000 ரூபா அபராதம் விதித்துள்ள நிலையில், அவ்வாறு குற்றமிழைத்த முதல் சந்தர்ப்பத்தில் விதிக்கப்படக்கூடிய அபராதம் ஒரு இலட்சம் ரூபாயாகும்.

எனினும், அவ்வாறு செய்யாததன் மூலம், அன்றைய தினம் கடமையாற்றிய உத்தியோகபூர்வமற்ற நீதவான் வழங்கிய உத்தரவு தவறானது என பாதிக்கப்பட்ட தரப்பு நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இது தொடர்பான விசாரணையை நீதிச்சேவை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

## கடந்த ஆறு நாட்களில் மாத்திரம் 40,877 சுற்றுலா பயணிகள் வருகை!

கொழும்பு, மார்ச் 12

மார்ச் மாதத்தின் கடந்த ஆறு நாட்களில் மாத்திரம் 40,877 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ரஸ்யாவில் இருந்து 50,800 பேரும், இந்தியாவில் இருந்து 5,602 பேரும் ஜேர்மனியில் இருந்து 4,110 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் மாத்திரம் 218,350 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## நிமோனியா காய்ச்சலினால் யாழில் இளைஞர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 12

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நியூமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

துன்னாலை வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த முத்துலிங்கம் சிவதர்ஷன் (வயது 29) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை திடீரென மயங்கி விழுந்த இளைஞனை வீட்டார் மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

விசாரணைகளில் நிமோனியாவே உயிரிழப்புக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தாய்லாந்து-இலங்கை உடன்பாடு பொருளாதாரத்தை மேம்படுத்தும்

*சீன ஊடகம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மார்ச் 12

அண்மையில் தாய்லாந்துடன் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என சீன ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, நீண்ட காலத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அதன் வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் அதன் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் உதவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும், தாய்லாந்தின் பிரதமருக்கும் இடையே கைச்சாத்தான இந்த ஒப்பந்தம் தற்போது நடைமுறையில்உள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 15 வருட காலபகுதியினுள் உடனடி மற்றும் படிப்படியாக கட்டண சலுகைகளை வழங்குகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து தாய்லாந்திற்கு மொத்தமாக 57.76 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு 302.64 அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

# ராஜபக்ச குடும்பத்தால் இனிச் சாதிக்க முடியாது

## ரணிலையும் சாடுகின்றார் முஜிபுர்

கொழும்பு, மார்ச் 12

**மொட்டுக்கட்சியை மையப்படுத்திய ராஜபக்ச தரப்பினால் எதையும் சாதிக்க முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தீவிர அரசியல் செயற்பாட்டாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**



ராஜபக்ச தரப்பில் இருந்து எவர் வேட்பாளராகப் போட்டியிட்டாலும் வெற்றி பெற முடியாது என்றும் தமது தரப்பு வேட்பாளர் வெற்றி பெறுவாரென நாமல் ராஜபக்ச எதிர்பார்ப்பது வேடிக்கை என்றும் முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைக்க தீர்மானித்தாலும் நாமல் உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் பாராளுமன்ற தேர்தலையே விரும்புகின்றனர்.

ரணிலுக்கு மக்கள் மத்தியில் போதுமான ஆதரவு இல்லாத காரணத்தினால் அவர், ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

ஆனாலும் மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதி தேர்தலை கோருவதற்கான காரணம், குறைந்தபட்சம் 15 உறுப்பினர்களையாவது பாராளுமன்றிற்கு கொண்டுவருவதே.

ரணிலுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுத்தால் நிச்சயம் தோல்வி என்பதும் அவர்களுக்குப் புரியும்-என்றார். (அ)

# இலங்கையில் அதிகரித்து வரும் இலத்திரனியல் சிகரெட் பாவனை!

கொழும்பு, மார்ச் 12



இலத்திரனியல் சிகரெட்டுகள் இலங்கையில் குறிப்பாக கிராமப் புறங்களில் அச்சுறுத்தலாக, மிக வேகமாக பரவி வருவதாக கலால் திணைக்களத்தின் கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜி.குணசிறி தெரிவித்தார்.

கம்பஹா கலால் திணைக்களத்தின் ஜா-எல விசேட கலால் சுற்றிவளைப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கைப்பற்றப்பட்ட சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஈ-சிகரெட் கையிருப்பை சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா மற்றும் பாணந்துறை போன்ற இலங்கையின் முக்கிய நகரங்களை மையமாகக் கொண்ட புறநகர்ப் பகுதிகளில் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களினால் தற்போது ஈ-சிகரெட்டுகள் பயன்படுத்தப்படுவது விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தற்போது இந்த சிகரெட் பாவனை படிப்படியாக இலங்கையின் தொலைதூர பகுதிகளுக்கும் பரவி வருகிறது. உதாரணமாக இரத்தினபுரியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர் ஒருவர் இவ்வாறான இலத்திரனியல் சிகரெட்டை தனது பாடசாலைக்குள் கொண்டு சென்றுள்ள சம்பவமும் அண்மையில் பதிவானதாகவும் அவர் கூறினார். (அ)

# வரி செலுத்தாத 1000 நிறுவனங்கள்

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏறக்குறைய 160 பில்லியனுக்கும் அதிகமான வரி நிலுவைகளை செலுத்தாத 1000 நிறுவனங்களுக்கு வரியை செலுத்தக் கோரி அறிவித்தல்களை அனுப்பியுள்ளது.

நிறுவனங்கள் தங்கள் நிலுவைத் தொகையை ஆறு மாதங்களில் செலுத்த வேண்டும் அல்லது வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களை பறிமுதல் செய்ய நேரிடும் என உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆளுநர் செபாலிகா சந்திரசேகரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த ஆண்டு இறுதி வரை நிலுவையில் இருந்த நிலுவைத் தொகையை ஆறு மாதங்களில் நீட்டிப்பு இல்லாமல் செலுத்துமாறு நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சில நிறுவனங்கள் பதிலளித்து, நிலுவைத் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

களம் வசூலிக்க ஏதுவாக தங்கள் சொத்துக்களை பறிமுதல் செய்ய ஒப்புக்கொண்டுள்ளன. வரி செலுத்துவதில் தவறிய நிறுவனங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு வரவழைத்து நிலுவைத் தொகையை மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க உள்ளோம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நிலுவைத் தொகையை வசூலிக்க கடுமையான நடைமுறையை பின்பற்றுகிறது மற்றும் உள்நாட்டு வருவாய் சட்டத்தின் கீழ் அதிகபட்ச அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட்டு வரிகள் வசூலிக்கப்படும். வரி நிலுவைகளை வசூலிக்க துணை ஆணையரின் கீழ் 11 பேர் கொண்ட குழுவை ஐஆர்டி நியமித்துள்ளது-என்றார். (அ)

# நாட்டு மக்களின் உணவுக்கான உரிமையை உறுதி செய்வோம்

## கூறுகின்றார் அனுரகுமார



கொழும்பு, மார்ச் 12

தேசிய மக்கள் சக்தி அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது இறுதியானது அல்ல எனவும் நாட்டை கட்டியெழுப்பும் ஆரம்பம் எனவும் அந்த கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் சகல உரிமைகளும் தற்போது இல்லாமல் போயுள்ளது.

நாட்டு மக்களுக்கு சிறந்த நிலைமையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.

எங்கள் மத்தியில் வேற்றுமைகள் இருக்கலாம். எனினும் பொது நோக்கத்திற்காக இணைந்துள்ளோம்.

முதலில் நாங்கள் எமது நாட்டு மக்களின் உணவு உரிமையை உறுதிப்படுத்துவோம். உண்பதற்கு உணவின்றி கட்டியெழுப்பபடும் நாடு பயனற்றது.

பொருளாதாரம் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகிறார்.

எனினும் மக்களுக்கு உண்ண உணவில்லை. உண்ண உணவில்லாத பொருளாதாரத்தால் என்ன பயன்?

நாட்டு மக்கள் ஒரு மாதத்திற்கு 6 ஆயிரத்து 500 மெற்றிதொன் அரிசியை பயன்படுத்துகின்றனர். வருடத்திற்கு 23 லட்சத்து 40 ஆயிரம் மெற்றி தொன். 35 லட்சம் மொற்றி தொன் கையிருப்பில் இருக்கவேண்டும்.

எமது நாட்டில் பெரும்போகத்தின் போது சுமார் 18 ஆயிரம் ஹெக்ரேயரில் நெல் பயிரிடப்படுகிறது.

எமது நாட்டுக்கு தேவைப்படும் அளவுக்கு மேல் நாம் அரிசியை உற்பத்தி செய்கின்றோம். மேலதிக கையிருப்பும் இருக்கின்றது.

எனினும் விவசாயிக்கு தனது நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை. நுகர்வோருக்கும் நியாயமான விலையில் அரிசியை கொள்வனவு செய்ய முடியவில்லை.

எமது நாட்டின் அரிசி சந்தையில் ஒரு பிறழ்வு காணப்படுகிறது.எமது நாட்டின் நெல் சந்தையில் ஒரு ஏகபோகம் உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்களே எப்போதும் விலையை தீர்மானிக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் அரிசி சந்தையின் ஏகபோகத்தை கட்டாயம் உடைத்தெறிவோம்-என்றார். (அ)

# தனிப்பட்ட ரீதியில் பெரமுனவின் உறுப்பினர்களை அணுகும் ரணில்

## மொட்டுக்குள் கடும் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 12

பொதுஜன பெரமுன கட்சியின் அதிகாரத்தை மீறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சியின் உறுப்பினர்களுடன் தனிப்பட்ட ரீதியில் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்து பொதுஜன பெரமுன தனது கவனத்தையும் கரிசனத்தையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்சவை ஜனாதிபதி சந்தித்தபோதே ஜனாதிபதிக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

சில பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் அமைப்பாளர்களும் ஜனாதிபதியின் பக்கம் சாய்ந்ததை அடுத்து இத்தகைய கரிசனைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டன.

தற்போது, பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு விசுவாசமாக உள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர்.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுன ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அனைத்து அறிகுறிகளும் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், பெரமுன இன்னும் எந்தவொரு முறையான முடிவையும் எடுக்கவில்லை. (அ)

# இறக்குமதி செலவு அதிகரிப்பு!

## ஜனவரியில் மாத்திரம் 9000 கோடி ரூபா

கொழும்பு, மார்ச் 12

இலங்கைக்கான நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 9,036 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையை சுட்டிக்காட்டி, இந்த வருடம் ஜனவரி மாதம் மாதத்தில் உணவு மற்றும் பானங்கள் இறக்குமதிக்காக 5,029 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், உணவு மற்றும் பானங்களுக்கு மேலதிகமாக ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் 4,007 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பேராசிரியர் தெரிவித்தார்.

இதன்படி, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்காக மொத்தம் 9,036 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

குறித்த தொகையானது கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான இறக்குமதி செலவை விட 28 வீதம் அதிகமாகும் என பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# "தமிழைப் போற்றி சைவம் வளர்ப்போம்" அறநெறி கல்வி அம்பாறை மாவட்டத்தில்

அம்பாறை, மார்ச் 12

**கல்முனை,பெரியநீலாவணை நெக்ஸ்ட் ரெப் சமூக அமைப்பு ,மட்டக்களப்பு சிவத் தொண்டர் திருக்கூடம் ஆகியன இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அறநெறி கல்வியை ஊக்கப்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுதுச் செல்கின்றன.**

அந்த வகையில் கல்முனை மணற்சேனை கிராமத்தில் பால முருகன் அறநெறி பாடசாலை யில் அண்மையில் அறநெறி ஆன்மீகச் செயற்பாடு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஆன்மீக தியான குருஜி என்.தேவநேசன், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பா ளர் கண.வரதராஜன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.லக்கு ணம் ஆகியோர் வளவாளர்க ளாக கலந்து கொண்டனர். (அ)



# பாடசாலை மாணவர்கள் நல்வாழ்வை மேம்படுத்த அதிகாரிகளுக்கு பயிற்சி

அம்பாறை, மார்ச் 12

பாடசாலை மற்றும் புறச்சூ ழலில் மாணவர்கள் எதிர்கொள் ளும் சவால்களை வெற்றி கொண்டு அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தி அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலை மாணவர் களுடன் தொடர்புபட்ட கல்வி மற்றும் சுகாதாரத்துறை அதிகா ரிகளை தெளிவூட்டும் வகை யில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் பயிற்சி செயல மர்வு கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யில் இடம்பெற்றுள்ளது.

பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ டீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு குறித்த பயிற்சி செயலமர்வினை ஏற் பாடு செய்திருந்தது.

பாடசாலை மாணவர்களின் உளநல ஆரோக்கியம், பாட சாலை பருவத்தில் நிகழும் உடல், உள மாற்றங்கள், சிறுவர் துஷ்பி ரயோகம் மற்றும் மன அழுத் தம், மாணவர்களை பகடிவதை செய்தல், தகவல் தொழில்நுட்ப மும் அதன் ஊடாக ஏற்படும் சாதக பாதகங்களும், போதை வஸ்து பாவனையில் ஈடுபடுவ தற்கான அடிப்படை காரணங் களும் அதிலிருந்து விடுபடுவ தற்கான வழிகளும், விசேட தேவையுடைய பிள்ளைகளை கண்டறிதலும் மருத்துவ ஆலோச னையும் என இந்நிகழ்வின் போது பல்வேறு தலைப்புகள ளில் விரிவுரையாற்றப்பட்டது.

# மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் விஜயம்

அம்பாறை, மார்ச் 12

சம்மாந்துறை, மல் வத்தை பிரதேச வைத் தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் சேவைகள் தற்போது மிகவும் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன.



அதிகமான நோயா ளர்கள் குறித்த வைத்தி யசாலை யின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற் காக தினமும் வருவதுண்டு. வெளிநோயாளர் பிரிவில் போது மான இடவசதிகள் இல்லாத தன் கார ணத்தினால் நோயா ளர்கள் பல் வேறு அசௌகரி யங்களையும் எதிர்நோக்கி வந்த னர்.

இந்த விடயம் தொடர்பில் பலரும் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததனையடுத்து ஆரம்ப சுகா தார சேவையினை மேம்படுத் தும் திட்டத்தின் கீழ் சுமார் 2 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டு வெளிநோயாளர் பிரி வுக்கான புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

அந்த வகையில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட கட்டடத்தை மக்கள் பாவனைக்கு கையளித்து வைத்தியசாலையின் சுகாதார நடவடிக்கைகளையும் பார்வை யிடும் பொருட்டு அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது பிராந்திய திட் டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், மல்வத்தை வைத்திய சாலை பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்தியர் கள், வைத்தியசாலை உத்தியோ கத்தர்கள், ஊழியர்கள் என பல ரும் கலந்துகொண்டனர். (அ)

# சாய்ந்தமருது அல்-ஹிலாலில் புலமையாளர்களுக்கு பாராட்டு

அம்பாறை, மார்ச் 12

கல்முனை கல்வி வலய சாய்ந் தமருது அல்-ஹிலால் வித்தியா லயத்திலிருந்து கடந்த 2023 இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய புலமையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாட சாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் பாடசாலை கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புலமையா ளர்களை பாராட்டி கௌரவித் தார்.

ஒவ்வொரு வருடமும் கணி சமான மாணவர்களை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியெய்யச் செய்யும் நூற்றாண்டுகளுக்கு மேல் வர லாற்றை கொண்ட இந்த பாட சாலையின் மாணவர்களை கௌரவிக்கும் விதமாக சாய்ந்த மருது பிரதான வீதியினூடாக



வேண்ட வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப் பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

புலமையாளர்களை பாராட்டி கௌரவித்த இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப் பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை வலயக்கல்வி பணிமனை கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ்,அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலா ளர் ஏ.எம். சாஹீர், வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப் பாளர்கள், உதவிக்கல்வி பணிப் பாளர்கள், ஆசிரிய ஆலோசகர் கள், சாய்ந்தமருது கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக உத்தியோகத்தர் கள், பாடசாலை பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், வர்த்தக பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாண வர்கள் சங்க பிரதிநிதிகள், ஊர் பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் ஏற்பாட்டில் திருகோணமலையில் மகளிர் தின நிகழ்வுகள்

திருமலை, மார்ச் 12

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலை மையில் திருகோணமலை திருக் கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் மகளிர் தின நிகழ்வு நேற்று முன் தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நஷ னல் லிமிடெட்டின் இணை நிறுவனரும் இயக்குனருமான திருமதி சுசித்ரா எல்ல பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

திருமதி சுசித்ரா எல்ல கோவிட் காலப்பகுதியில் கோவிட் தடுப்பூசியை கண்டு பிடித்து, 600 பில்லியன் கொவிட் தடுப்பூசிகளை தயாரித்து மக்கள் உயிரைக் காத்தமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் " உலகில் மிகப் பலம் வாய்ந்த பெண்" எனும் விருதை வழங்கி கௌரவித்தார்.



அத்துடன், 1880 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலையகப் பெண் ஒருவர் தேயிலை பறிக் கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருமதி சுசித்ரா எல்லவுக்கு அன்பளிப் பாக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் திருகோணமலை யில் கல்வித்துறையில் சாதித்த பெண்கள், கிராம அபிவிருத்தி அமைப்புகள், பெண்கள் அமைப் புகளில் சாதனைகள் நிலைநாட் டிய பெண்கள், கலாசார நிகழ்வு களில் சாதனை படைத்த பெண் கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ் வில் பாராட்டப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# கிழக்கு இளைஞர்கள் அமைப்பினால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தினம்



அம்பாறை, மார்ச் 12

கிழக்கு இளைஞர் அமைப் பின் தலைவர் தானிஷ் ரஹ்மத் துல்லா தலைமையில் அண்மை யில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிர தம அதிதியாகவும், றிஸ்லி முஸ் தபா கல்வி உதவி அமைப்பின் தலைவரும், மயோன் குருப் நிறுவனத்தின் பணிப்பாளரு மான றிஸ்லி முஸ்தபா கௌரவ அதிதியாகவும், காரைதீவு சுகா தார மருத்துவ அதிகாரி வைத்தி யர் தஸ்லிமா பஷீர், கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் உதவி கல்வி பணிப்பாளர் பீ. ஜிஹானா ஆலீப் , அம்பாறை மாவட்ட மகளிர் மேம்பாட்டு அலுவலர் சுரேகா கதுருசிங்க ஆகியோர் விசேட அதிதிகளா கவும், வாஹிதா இம்தியாஸ் காரியப்பர், கிழக்கு இளைஞர் அமைப்பின் ஆலோசகர் அதி பர் றிப்கா அன்ஸார் திடீர் மரண விசாரணை அதிகாரி அல் ஜவா ஹிர் ஆகியோர் சிறப்பு அதிதிக ளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

ஈழநாடு



# பாப்பரசர் பிரான்சிஸ் விடுத்த அழைப்பை நிராகரித்த ரஷ்யா

## உக்ரைன் தொடர்பில் அவர் ஆழ்ந்த கவலை



**ரோம், மார்ச் 12**

**உக்ரைய்னுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுமாறு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் விடுத்த அழைப்பை ரஷ்யா நிராகரித்துள்ளது.**

மேலும் உக்ரைய்னின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியிடம் தாம் சரணாகதி அடையமாட்டோம் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதலில் ஈடுபடும் தரப்புக்களில் ஒருதரப்பு மிகவும் மோசமான பாதிப்பை அடையும்போது மற்றைய தரப்பு சமாதானத்தில் ஈடுபட்டு பாதிப்பை குறைக்க வேண்டும் என பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்திற்கு தரப்பினர் வெள்ளைக் கொடியினை பயன்படுத்த வேண்டும் என்று பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் தனது ஊடக நேர்காணலில் உக்ரைன் தொடர்பில் ஆழ்ந்த அவதானிப்பை வெளியிட்டிருந்தார்.

(அ)

# அமெரிக்க ஜனாதிபதியின் கருத்தை நிராகரித்த பெஞ்சமின் நெத்தன்யாகு



ஜெருசலேம், மார்ச் 12

காசாவில் போரில் இஸ்ரேலின் அணுகுமுறை “இஸ்ரேலுக்கு உதவுவதை விட இஸ்ரேலை காயப்படுத்துகிறது” என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்த கருத்தை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்தார்.

பெரும்பான்மையினருக்கு எதிராக நான் தனியார் கொள்கைகளை பின்பற்றுகிறேன் என்கிறார்கள். பெரும்பான்மையான இஸ்ரேலியர்களின் விருப்பம். இது இஸ்ரேலின் நலன்களை புண்படுத்துகிறது என்று அவர் இதன் மூலம் கருதினால், அவர் இரண்டு விடயங்களிலும் தவறு என்று நெத்தன்யாகு கூறினார்.

காசாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இழக்கப்படும் அப்பாவி உயிர்கள் குறித்து அதிக கவனம் செலுத்தவேண்டும்” என்று பிடன் கூறிய ஒரு நாள் கழித்து, நெத்தன்யாகுவின் இந்த கருத்துக்கள் வந்துள்ளன.

(அ)

# ஏழு ஒஸ்கார் விருதுகளை குவித்த ‘ஓப்பன்ஹெய்மர்‘



லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 12

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 96 ஆவது ஒஸ்கார் விருது வழங்கல் விழாவில் ஒப்பன்ஹெய்மர்” திரைப்படமானது ஏழு ஒஸ்கார் விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

அந்தவகையில் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குனர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த ஒரிஜினல் ஸ்கோர், சிறந்த எடிட்டிங், சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர் ஆகிய பிரிவுகளில் குறித்த திரைப்படம் விருதை வென்றுள்ளது.

இதன் அடிப்படையில் சிறந்த நடிகருக்கான விருதை சிலியான் முர்பியும் , சிறந்த இயக்குனருக்கான விருதை கிறிஸ்டோபர் நோலனும் பெற்றுள்ளனர்.

இதேநேரம் புவர் திங்ஸ் திரைப்படமானது சிறந்த புரோடக்சன், சிறந்த ஆடை வடி வமைப்பு, சிறந்த நடிகை, சிறந்த ஒப்பனை மற்றும் ஹேர்ஸ்டைல் ஆகியவற்றுக்கான விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்திய வலதுசாரி கூட்டு போர்த்துக்கலில் வெற்றி

## தீவிர வலதுசாரிக் கட்சிக்கும் அதிக ஆசனம்

லிஸ்பன், மார்ச் 12

போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மத்திய வலதுசாரி கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தலில் இந்த வெற்றி பதிவாகியுள்ளது.

இதனை மத்திய வலதுசாரி கூட்டணியின் தலைவர் லூஸ் மோன்டென்கிரோ உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை தீவிர வலதுசாரி கட்சியின் ஆதரவில்லாமல் ஆட்சியமைக்க முடியாது எனவும், இருந்த போதிலும் அவர்கள் பேச்சுக்களை நிராகதித்து விட்டதாகவும் லூஸ் குறிப்பிட்டுள்ளார்.

தீவிர வலதுசாரிக் கட்சியினர் 230 பேர் கொண்ட சபையில் 48 ஆசனங்களை வெற்றி பெற்றுள்ளனர். முன்




பிருந்ததைவிட நான்கு மடங்கு வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஐரோப்பாவில் வலதுசாரி கொள்கை வீழ்ச்சியடையும் போக்கு போர்த்துக்கல் தேர்தல் முடிவுகள் மூலம் புலப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 50 வருடத்திற்கு பின்னர் பாசிச கொள்கையிலிருந்து ஐரோப்பா ஜனநாயகத்திற்கு திரும்பியிருந்தது. எதிர்வரும் தேர்தல்களில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெறக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது.

(அ)

# பிரான்ஸில் பெரும் நீர் பற்றாக்குறை!

## நிர்மாண பணிகளுக்கான அனுமதி இரத்து

பாரிஸ், மார்ச் 12

நீர் பற்றாக்குறை காரணமாக பிரான்ஸின் தெற்குப்பகுதியில் நிர்மாணப் பணிகளுக்கு அனுமதி வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸின் வார் பிரிவில் உள்ள 9 கம்யூன்களை உள்ளடக்கிய அதிகார சபையினால் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு அனைத்து புதிய கட்டுமானங்களுக்குமான அனுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.

புதிய நிர்மாணங்கள் மின் விநியோகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன், குறித்த பகுதியில் குறைந்து வரும் நீர் வளங்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

2022 ஆம் ஆண்டு அதாவது குறித்த தடை விதிக்கப்படுவதற்கு முன்னதாக அதிகாரப் பகுதிக்குட்பட்ட பல கம்யூன்கள் கடுமையான நீர் பற்றாக்குறையை எதிர்கொண்டிருந்தன.

மேலும், நாளொன்றுக்கு பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு குறித்தும் வரையறுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகளுக்கு கட்டிட நிர்மாணிப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததுடன், குறித்த தடை நியாயமற்றது எனவும் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதன்படி, திட்ட அனுமதிச் செயல்பாட்டின் போது தண்ணீர் பற்றாக்குறைக்கான போதுமான ஆதாரங்களை அதிகாரிகள் வழங்கவில்லை என நிர்மாணிப்பாளர்கள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

எவ்வாறாயினும், டூலோனில் உள்ள நிர்வாக நீதிமன்றம், 2021 ஆம் ஆண்டில் அதிகாரிகளால் நடத்தப்பட்ட ஆய்வுகளை சுட்டிக்காட்டி நீர் பற்றாக்குறை நிலவுவதை உறுதிப்படுத்தியது.

இதன்படி, நீதிமன்றம் குறித்த பகுதியில் வறட்சி கட்டுப்பாடுகளை முன்னிலைப்படுத்தியதுடன், நீச்சல் குளங்களுக்கு நீர் நிரப்புவதற்கு தடை விதித்தது.

இந்த நிலையில், இப்பகுதியில் நீண்ட காலமாக தண்ணீர்



பிரச்சினைகள் காணப்பட்டாலும் வலையமைப்பின் மோசமான பராமரிப்பு காரணமாக இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு நிர்மாணிப்பாளர்கள் தீர்மானித்தனர்.

ஆனாலும், இவர்களது முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. தடைக்கு முன்னதாக ஏற்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட அனுமதிகள் குறித்து தொடர்ந்தும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே, இவ்வாறான விதிகள் தற்போது நடைமுறையில் உள்ள கம்யூன்கள் ஒரு சில மட்டுமே பிரான்சில் காணப்படுகின்றன.

இருப்பினும், இந்த தீர்ப்பிற்குப் பிறகு மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கு உதவும் வகையில் நிர்மாணப் பணிகளுக்கு அனுமதி வழங்குவதை இடைநிறுத்தும் உத்திகளை பெரும்பாலான கம்யூன்கள் அவ்வப்போது கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தின நிகழ்வுகள் வெறுமனே சம்பிரதாயத்திற்கு நடப்பவையல்ல!

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார்





கிளிநொச்சி, மார்ச் 12

**வருடந்தோறும் நடத்தப்படுகின்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் என்பது வெறும் சம்பிரதாயத்திற்காக நடாத்தப்படும் நிகழ்வுகளாக மட்டும் இருக்கக்கூடாது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள பாராளுமன்ற உறுப்பினரும் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி தர்மபுரத்தில் இடம்பெற்ற கட்சியின் மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெண்களுக்கு இன்னமும் முழுமையான சமத்துவம் கிடைக்கவில்லை என்பதே எங்களது நிலைப்பாடு, பெண்கள் அனைத்து துறைகளிலும் இன்று மிக வேகமான வளர்ச்சியை அடைந்துவந்தாலும்,பல இடங்களில் சமத்துவமின்மை என்பது தொடர்ந்துகொண் டேயிருக்கிறது. இந்த நவீன யுகத்திலும் பிற்போக்கு மனப்பாங்குடன் பெண்களை நோக்குவது கவலைக்குரியது. எனவே இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும், பால் நிலை சமத்துவம், பெண் உரிமைகள் என்பன வெறும் வார்த்தைகளாக மாத்திரம் இருக்க கூடாது அவை செயற்பாட்டு ரீதியாக மாற்றம் பெறவேண்டும் அவ்வாறே வருடந்தோறும் நடக்கின்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளும் வெறும் சம்பிரதாயத்திற்கு நடாத்தப்படுகின்ற நிகழ்வுகளாகவும் இருக்க கூடாது எனத் தெரிவித்த அவர் எங்களுடைய சமத்துவக் கட்சியினை பொறுத்தவரை பெண்களுக்குரிய இடத்தினை முழுமையாக வழங்கி ஒரு கட்சியாக இருக்கிறது என்பதனையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்- என்றார்.

சமத்துவக் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி தர்மலிங்கம் செல்வராணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 2500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரிசிப் பொதிகள் வழங்கிய சஜித்



கொழும்பு, மார்ச் 12

கொழும்பு மாவட்டத்தில் உள்ள 2500 கர்ப்பிணி தாய்மார்களின் போஷாக்கில் அக்கறை காட்டும் விதமாக அரிசிப் பொதிகளை விநியோகிக்கும் வேலைத் திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமுல்படுத்தியுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குணசிங்க விளையாட்டரங்கில் குறித்த அரிசிப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. இந்த வேலைத்திட்டத்திற்காக 150 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்தவர் கைது!

கொழும்பு, மார்ச் 12

எலபாத்த, நிரியெல்ல பிரதேசத்தில் குடும்ப தகராறு காரணமாகக் கணவரால் மனைவி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாகக் கணவன் - மனைவி இருவரும் தனித்தனி வீடுகளில் வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த பெண் குழந்தைகளை அழைத்து வருவதற்காகக் கணவரின் வீட்டுக்குச் சென்றபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

40 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் 43 வயதான கணவன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை; விவாதம் 19 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 12

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

குறித்த பிரேரணைமீது இரு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என தெரியவருகின்றது.

மார்ச் மாதத்துக்குரிய 2ஆவது வார பாராளுமன்ற அமர்வு 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவ்வாரத்துக்குரிய நிகழ்ச்சிநிரல் தொடர்பில் ஆராய சபாநாயகர் தலைமையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு அடுத்தவாரம் கூடும்.

இதன்போது மேற்படி திகதிகள் உறுதிப்படுத்தப்படலாம் என தெரியவருகின்றது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் எதிரணிகள் எல்லாம் ஒன்றுபட்டுள்ளதால், விவாதம், வாக்கெடுப்பு வாரத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களை கொழும்பில் முகாமிட்டு இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

(அ)

# யுக்திய சுற்றிவளைப்புக்காக களமிறக்கப்படும் இராணுவம்!

கொழும்பு, மார்ச் 12

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்காக நேற்று முதல் இராணுவத்தினரின் ஒத்துழைப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.




யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவுவதாக தெரிவித்திருந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதன்படி நாடாளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பாதாளக் குழு செயற்பாட்டை இல்லாதொழித்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக நேற்று முதல் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பூநகரியில் மதுபான விற்பனை நிலையங்களால் மக்கள் பாதிப்பு!

## வைத்தியசாலை பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மார்ச் 12

பூநகரியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்களால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பூநகரி வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

பூநகரி வைத்தியசாலையிருந்து 400 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் குறித்த மதுபான சாலை அமைந்துள்ளது. இம் மதுபானசாலை காரணமாக அப்பகுதியில் பல்வேறு அநாகரிகச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

மதுபானப் பாவனையின் பின்னர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோர் ஊழியர்களுடன் தேவையற்றதும், அநாவசியமானதுமான வார்த்தைப்பியோகங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான சம்பவங்களின் போது பொலிஸார் சம்பவ இடத்திற்கு உடனடியாக வருவதில்லை.

மதியம் 2 மணி முதல் நள்ளிரவு 1 மணிவரை மருந்து கட்டுவதற்கான வருகை தருபவர்கள் அதிகமாக உள்ளனர். நோயாளர் காவு வண்டிகள் பழுதடைந்த காலங்களில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றுவதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன. எனவே இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது.

(அ)

# 252 மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு தொடர்கின்றது

கொழும்பு, மார்ச் 12

நாட்டில் சுமார் 252 மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் டொக்டர் சமால் சஞ்சீவ தெரிவித்தார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் பதவி விலகி ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தற்போதைய சுகாதார அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் மருந்துப் பொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு வழங்கவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பிரதேச மருத்துவமனைகளில் மருந்து கொள்வனவு செய்வதற்காக மருத்துவமனை பணிப்பாளர்களுக்கு நிதி வழங்கும் திட்டமொன்று நடைமுறையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடைமுறையினால் முறைகேடுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் மருந்துப் பொருள் கொள்வனவு கிரமப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## வலி. வடக்கில்...

காணிகளில் பெரும்பாலான காணிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறவில்லை. இன்னமும் ஓரிரு நாட்களில் காணிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் உங்கள் காணிகளுக்குள் வர முடியும் என இராணுவத்தினர் தம்மை திருப்பி அனுப்பியதாக சில காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (அ)

## தமிழர்மீதான...

னதல்ல - அரசுக்கு ஆரோக்கியமான தல்ல. எனவே, நாங்கள் எங்கள் உரிமையை நிலை நிறுத்துவதற்காக எத்தகைய முயற்சிகளை நாங்கள் எடுப்போம். இதனை அயல் மற்றும் வெளிநாடுகள் பார்த்துக் கொண்டிருக்கின்றன - காந்தி தேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது. வெளிநாடுகள் ஒன்றிணைந்து நாம் உரிமையுடன் வாழ வழிசெய்ய வேண்டும். அதுவரை ஜனநாயக முறையில் போராடுவோம் - என்றார். (ஐ)

## ஐ. எம். எவ்....

நேற்றைய கூட்டத்தில், சர்வதேச நாணய நிதியத்தால் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு தரவுகளுடன் கூடிய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வலியுறுத்தினார்.

இந்த செயல்பாடுகள் அனைத்தையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பான தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சுமந்திரன் எம். பிக்கும் பாராளுமன்றத்துக்கும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படுவதே அரசாங்கத்தின் விருப்பம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த முன்மொழிவுகளை சர்வதேச நாணய நிதியத்துடன் மேலும் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட ஏனைய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துரையாடலுக்கு அழைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் சாதகமான மற்றும் சரியான வேலைத் திட்டத்திற்கு தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

இரு தரப்பு கடன் வழங்குநர்கள், வர்த்தக கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களுடன் நடைபெற்று வரும் பேச்சுகள் குறித்து திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன, விரிவான விளக்கத்தை அளித்ததுடன், இந்தப் பேச்சு சுற்றுகளை இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை தீர்ப்பு தொடர்பான அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் செயல்பட்டு வருவதாகவும் அதற்கான விரிவான கட்டமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நிதி இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

# அரச நிறுவனங்களுக்கு வாடகை வாகனங்கள்; வருடாந்தம் 256 கோடி ரூபாவுக்கு மேல் செலவு

கொழும்பு, மார்ச் 12

அரச நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் எடுக்கப்பட்ட வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தப்படும் தொகை 256 கோடி இருபது இலட்சம் ரூபா (2562 மில்லியன் ரூபா) எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கம்பஹா மாவட்ட சபை உறுப்பினர் கோகிலா குணவர்த்தன கேட்ட கேள்விக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குத்தகைக்கு எடுக்கப்பட்ட 4,427 வாகனங்களுக்கு இந்தத் தொகை செலுத்தப்படுகிறது.

இவ்வாறு அரச நிறுவனங்களின் 69,121 வாகனங்கள் இயங்கும் நிலையில் வாகனங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் 17,954 வாகனங் கள் அரை அரச நிறுவனங்களுக்கு சொந்த மானவை. இம்மாதம் முதல் திகக்குள் புதுப்பிக் கப்பட்ட தகவலின் அடிப்படையில் இந் தத் தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (அ)

## வவுனியாவை சேர்ந்த முன்னாள் போராளிக்கு ரி. ஐ. டி. அழைப்பாணை

வவுனியா, மார்ச் 12

முன்னாள் போராளி ஒருவருக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வசிக்கும், போராளிகள் நலன்புரிச் சங்க தலைவர் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்பவரையே கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வாக்குமூலம் வழங்க வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் குறித்த அரசியல் கைதியின் வீட்டுக்கு சென்று நேற்று முன் தினம் வழங்கப்பட்டுள்ளது.

அவரின் முகநூல் கணக்கு தொடர்பாகவே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ரமழான்...

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், இஸ்லாமிய சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலமாக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதன்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. இதையடுத்து, ரமழான் நோன்பு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## மரதன் ஓடிய...

திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற சென்றதாகவும் பின்னர் அவசர சிகிச்சைக்கு ஆளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அவருக்கான சி.பி.ஆர் சிகிச்சை உட்பட போதியளவான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் எனினும் போதிய வைத்திய உபகரணங்களைக் கொண்ட அம்புலன்ஸ் இல்லாததால் அக்கறைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்ற முடியாமல் போனதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த மாணவனின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வான நிலையில் மாணவனின் உயிரிழப்புக்கு வைத்தியசாலையின் கவனயீனமே காரணம் என மாணவர்களும், இளைஞர்களும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் அப்பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் உட்பட படையினர் குவிக்கப்பட்டனர். (அ)

# வெடுக்குநாறிமலையில் கைதாகிய 8 பேருக்கு கைவிலங்குடன் சிகிச்சை

வவுனியா, மார்ச் 12

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேருக்கும் கைவிலங்குகளுடன் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாசிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டதாக சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் குறித்த 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்போது குறித்த 8 பேரினதும் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அந்தவகையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காட்டுத் தீ பரவல் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 12

நாட்டில் நிலவம் கடும் வறட்சியான வானிலை காரணமாகக் காட்டுத் தீ பரவல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களில் நாடளாவிய ரீதியில் சுமார் 25 காட்டுத்தீ பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்த காட்டுக்குத் தீ வைப்பவர்களைக் கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## கடும் உச்சத்தில்...

கேட்டுள்ளது.

முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை வீட்டில் வைத்து கவனித்துக் கொள்ளுமாறும், சிறு குழந்தைகள் தொடர்பிலும் அவதானத்துடன் செயல்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## நல்லூரில்...

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளாரின் அழைப்பின் பேரில் நல்லை ஆதீனம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட நேற்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், பங்கேற்றவர்கள் "வடக்கும் கிழக்கும் தமிழர் நிலம் அபகரிக்க முயலாதே", "எமது வழிபாட்டு உரிமையை தடுக்காதே", "பண்பாட்டு சின்னங்களை தொல்லியல் போர்வையில் சூறையாடாதே! பொலிஸ் அதற்கு துணையா", "இலங்கை அரசே சிவனடியார்களை விடுவி! அவர்களும் சிவன் சொத்தே - சிவன்சொத்து குலநாசம்" என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன், அது தொடர்பான கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் சைவ, கிறிஸ்தவ மதகுருமார், பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், த. சித்தார்த்தன், செ. கஜேந்திரன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## விமான படையில்...

கடந்தகால வான் தாக்குதல்களே தமது கண்ணில் நிழலாடுவதாக சொன்னாலும், பெரும் தொகையானவர்கள் கண்காட்சியை பார்வையிட்டது அரசுக்கும், விமானப்படைக்கும் முக்கியமான வெற்றியாகும்.

இந்த நிகழ்வானது கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான களமாக அமைந்தது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் இளைஞர்களிடமிருந்து விமானப்படையின் மீதான ஆர்வத்தை காணக்கூடியதாக இருந்ததாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சாகல ரத்நாயக்க, யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக இந்தத் திட்டத்தை கருத்தில் கொண்டு விமானப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ச்சியை நடத்தியதாகவும், யாழ்ப்பாணத்தில் இருந்து 250 இளைஞர்கள் விமானப்படையில் சேர விண்ணப்பித்ததாகவும் கூறினார்.

"100 க்கும் மேற்பட்ட அதிகாரிகள் மற்றும் 156 பேர் மற்ற பதவிகளைத் தேடும் ஆர்வத்தின் இந்த எழுச்சி, விமானப்படை பற்றிய சமூகத்தின் பார்வையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது," என்று அவர் கூறினார்.

அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களை இலங்கை விமானப்படையில் சேரவும், விமானப்படையின் ஒரு பகுதியாகவும் அழைப்பு விடுத்தார். (அ)

# பல்தேசிய நிறுவனங்களிடம் வடக்கு கடல் தாரை வார்ப்பு!

## எதிர்கால சந்ததியினருக்கு பாதிப்பு என்கிறார் செல்வின்

**யாழ்ப்பாணம், மார்ச் 12**

**வடக்கு மக்களின் கடல்வளத்தை பல்தேசிய நிறுவனங்களிடம் தாரை வார்க்கும் செயற்பாட்டால் எதிர்கால சந்ததியினருக்கு பாதிப்பு ஏற்படலாம் என சமூக செயற்பாட்டாளரும் மூத்த நிர்வாக அதிகாரியுமான செல்வின் தெரிவித்தார்.**

**யாழில் இடம்பெற்ற மீனவர் அமைப்புகளுடனான கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனை கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

மனிதன் வாழ்கின்ற இயற்கை சூழல் மக்களின் கட்டுப்பாட்டுகள் இருக்க வேண்டுமே அல்லாமல் பல்தேசிய கம்பனிகளிடம் இருப்பது ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும்.

வடக்கு மக்களின் கடல் சூழல் பல்தேசிய கம்பனிகளிடம் தாரை வார்க்கும் செயற்பாடானது மீனவ மக்களின் வாழ்வியலை கடல் சூழலில் இருந்து அப்புறப்படுத்தும் செயற்பாடாக அமைகிறது.

யாழ்ப்பாண குடாக்டலின் வெளிப்புறம் பாக்கு நீரிணையாகக் காணப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாண குடாக்கடலின் பல இடங்களில் பாலங்கள் மற்றும் சிறிய மதகுகள் இடப்பட்டு இயற்கை நீரோட்டங்கள் மறிக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக யாழ்ப்பாண குடாக்கடலை நம்பி வாழ்கின்ற சிறு மீன்பிடியாளர்களின் வாழ்வியல் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதுடன் சிறு கடல் தொழில் வேளாண்மை அழிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் 50 விதமான புரதம் கடல் உணவில் இருந்து பெறப்படும் நிலையில் யாழ்ப்பாண குடாவில் நீர் வேளாண்மை என்ற பெயரில் கடல் அட்ட பண்ணைகள், பாசி வளர்ப்புக்கள் திணிக்கப்பட்டு வருகிறது.



அட்டை பண்ணைகளால் வருமானம் அதிகரிக்கும். அந்நிய செலாவணியை பெறலாம் என்ற கருத்து மேலோங்கி இருக்கின்ற நிலையில் அதனை நானும் மறுக்கவில்லை.

எமது உணவுத்தட்டில் கடல் அட்டை இல்லாத இல்லாத நிலையில் நாம் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கேள்விகளுக்கு அப்பால் இந்த வர்த்தக நீதியான துறை தோற்றுப் போனால் பாரம்பரிய மீன்பிடியை நம்பி இருப்பவர்களின் நிலை என்ன என்பதை எவராலும் கூற முடியுமா?

பல்தேசிய கம்பனிகளின் வருமான மார்க்கத்திற்காக எமது வளங்களை விட்டுவிட்டு பல்தேசிக் கம்பனிகளின் விநியோகச் சங்கிலி தோற்றுப் போனால் மீண்டும் கடல் மீன்பிடியில் மீன்பிடி சமூகம் இறங்குமாக என்ற கேள்வி காணப்படுகிறது.

ஆகவே எமது கடற் தொழில் சமூகத்தையும் அவர்களின் மீன்பிடி முறைகளையும் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என்றால் கடலை சுதந்திரமாக சுவாசிக்க விட வேண்டும்-என்றார்.

(அ)

# பெரிய வெங்காய விலை 1000 ரூபாவை தொடலாம்

## இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 12

அரசாங்கம் உடனடியாக தலையிட்டு வெங்காயம் இறக்குமதிக்கு இந்தியாவிடம் இராஜதந்திர கோரிக்கை விடுக்காவிட்டால், வெங்காயத்தின் விலை 1,000 ரூபாவை தொடும் என இறக்குமதியாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொத்த வியாபார சந்தையில், பெரிய வெங்காயத்தின் விலை 580-600 ரூபா வரை அதிகரித்து, சில்லறை விலையாக 700 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் கையிருப்பில் உள்ளதாகவும், பாகிஸ்தானின் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியதால் வெங்காய இறக்குமதி நிறுத்தப்பட்டதே இதற்கு காரணம் என்றும் கொழும்பு வெங்காய இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் இந்தியா தனது ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதித்து சில மாதங்கள் ஆகியும், அதற்கு மாற்றாக பாகிஸ்தானில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து, தற்போது அந்த நாட்டில் வெங்காய இருப்பு முடிவடைந்ததால் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

மேலும் பங்களாதேஷ் மற்றும் துபாய்க்கு இந்தியாவின் ஏற்றுமதி மாதத்திற்கு 50,000 மெற்றிக் தொன்களாக வரையறுக்கப்பட்டுள்ளது என்று மொத்த விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி இலங்கை அரசாங்கமும் தலையிட்டு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க முடியும் எனவும், அரசாங்கத்திடம் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கொழும்பு பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் மேலும் கூறினர். (அ)

# தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கேப்பாபிலவு மக்கள் மகஜர் கையளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 12

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி நேற்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்று காலை மாவட்ட செயலகத்துக்கு சென்ற குறித்த மக்கள் மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் ஜனாதிபதி, மற்றும் அரசாங்க அதிபருக்கான மகஜரையும் கையளித்துள்ளனர்.

பல வருட காலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் இதன்போது தெரிவித்தனர்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, வைத்திய



சாலை, தேவாலயம் உள்ளிட்ட முக்கிய மக்களின் குடியிருப்புக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எரிபொருள் விலை மேலும் குறையும்!

கொழும்பு, மார்ச் 12

எரிபொருளின் விலையை மேலும் குறைக்க தயாராக இருப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருத்தப்பட்ட மின்சாரசபை சட்டமூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய சட்டமூலம் சட்ட திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

விலை சூத்திரம் தொடர்பில் பங்குதாரர்களை அழைத்து எரிபொருளின் விலையை மேலும் குறைக்க தயாராக இருக்கிறோம்-என்றார். (அ)

# வாகன பதிவு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 12

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் புதிய வாகன பதிவுகள் 23.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, 2022ஆம் ஆண்டில் 19,218 வாகனங்களும், 2023 ஆம் ஆண்டில் 23,698 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் புதிய மோட்டார் சைக்கிள் பதிவுகளும் அதிகரித்துள்ளன.

2022ஆம் ஆண்டில் 8,363 ஆக இருந்த புதிய மோட்டார் சைக்கிள் பதிவுகள் கடந்த ஆண்டில் 16,869 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த வருடம் 636 பஸ்கள் பதிவு செய்யப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# பாதுகாப்புச் செயலாளரை சந்தித்த பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, மார்ச் 12

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று திங்கட்கிழமை பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை பாதுகாப்பு அமைச்சில் வைத்து சந்தித்துள்ளார்.

இதன்போது புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு பாதுகாப்புச் செயலர் தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அத்துடன் இச்சந்திப்பின் தனித்துவத்தைக் குறிக்கும் வகையில் நினைவுப் பரிசுகளும் பரிமாறப்பட்டன.

இதில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதரவும் கலந்து கொண்டார்.

(அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விக்ரம் - ராஜன் - கங்கு கிண்ணம் சம்பியனானது கே. சி. சி. சி. அணி




யாழ்ப்பாணம், மார்ச் 12

கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 108 ஓட்டங்களால் வீழ்த்தி கே. சி. சி. சி. என அழைக்கப்படும் கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்தமாக 33ஆவது வருடமாக கடினபந்து கிரிக்கெட் போட்டியை நடத்தியது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த இறுதிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்தது. 40 ஓவர்கள் கொண்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கே. சி. சி. சி. அணி 197 ஓட்டங்களைப் பெற்றது. இதில், ஜெயரூபன் சிறப்பாக ஆடி 71 ஓட்டங்களை குவித்தார்.

கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் சார்பில் பந்துவீசிய ரசிகரன் 21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

198 ஓட்டங்கள் இலக்கை விரட்டிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 26.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 89 ஓட்டங்களையே பெற்றது. 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறிய கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் வரலக்ஷன் சிறப்பாக செயல்பட்டார். அவர் எடுத்த 30 ஓட்டங்களே அணியில் வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஆட்டமாக அமைந்தது.

கே. சி. சி. சி. அணியின் பந்து வீச்சில் சாம்பவன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்களையும் , துஷியந்தன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர் .

போட்டியின் நாயகனாக சாம்பவன், தொடரின் நாயகனாக துஷ்யந்தன் ஆகியோர் பெற்றனர். அத்துடன், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜெயரூபன், சிறந்த பந்துவீச்சாளராக சாம்பவன் ஆகியோர் விருதுகளை வென்றனர். இவர்கள் அனைவருமே கே. சி. சி. சி. வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரோஹித் சென்னைக்கு விளையாட வேண்டும்!

மும்பை, மார்ச் 12

எதிர்காலத்தில் சென்னை அணியில் ரோஹித் சர்மா விளையாட வேண்டும். அவர் அந்த அணிக்கு தலைமை தாங்கவும் முடியும் என்று அந்த அணியின் முன்னாள் வீரர் அம்பதி ராயுடு தெரிவித்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியை வழிநடத்தி 5 தடவைகள் அந்த அணி கிண்ணம் வெல்லக் காரணமானவர் ரோஹித் சர்மா. அவரை தலைமை பதவியிலிருந்து விலக்கிவிட்டு ஹார்திக் பாண்ட்யாவை அந்த அணி தலைவராக நியமித்துள்ளது. இது தொடர்பில் கடும் விமசர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் சென்னை, மும்பை அணிகளில் விளையாடி ஓய்வு பெற்ற அம்பதி ராயுடு, எதிர்காலத்தில் ரோஹித் சர்மா சென்னை அணியில் விளையாடுவதை நான் பார்க்க விரும்புகிறேன். அவர் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக நீண்ட காலம் விளையாடியுள்ளார். அவர் சென்னைக்காக விளையாடி அங்கேயும் வெற்றி பெற்றால் நன்றாக இருக்கும். சி. எஸ். கே அணிக்கு தலைமை தாங்கும் வாய்ப்பும் அவருக்கு உள்ளது”- என்றார். (ஐ)




# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்; தொடர் முழுமையாக ஆஸி. வசம்!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 12

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்து சென்று 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில் 2ஆவது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து 162 ஓட்டங்களுக்கு சுருண்டது. அதிகபட்சமாக ரொம் லதாம் 38 ஓட்டங்கள் சேர்த்தார். அவுஸ்திரேலிய அணி தரப்பில் ஜோஷ் ஹசில்வூட் 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலிய அணி 256 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக மோர்னஷ் லபுஷான் 90 ஓட்டங்கள் குவித்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி அபாரமாக பந்துவீசி 7 விக்கெட்களை சாய்த்தார்.

இதனால் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 94 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதைத் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய நியூசிலாந்து அணி 2ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கேன் வில்லியம்சன் 51 ஓட்டங்களும், வில் யங் ஓர் ஓட்டமும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற 3ஆம் நாள் ஆட்டத்தை டாம் லதாம் 65 ஓட்டங்களுடனும், ரச்சின் ரவீந்திரா 11 ஓட்டங்களுடனும் தொடங்கினர்.

அபாரமாக விளையாடிய ரொம் லதாம் 73 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஆனால், மறுமுனையில் நிதானமாக விளையாடி அரைச்சதமடித்தார் ரச்சின் ரவீந்திரா. அவருக்கு உறுதுணையாக விளையாடிய டரில் மிற்செல் 58 ஓட்டங்கள் குவித்து ஹசில்வூட் பந்தில் வீழ்ந்தார். ரச்சின் ரவீந்திரா 153 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்து (10 பௌண்ட்ரிகள்) கம்மின்ஸ் பந்தில், அலெக்ஸ் கேரியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ரொம் பிளண்டல் 9, கிளென் பிலிப்ஸ் 16, குக்கெலின் 44, ரிம் சௌதி 0, மேட் ஹென்றி 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். 108.2 ஓவர்களில் 372 ஓட்டங்களுக்கு நியூசிலாந்தின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. அவுஸ்திரேலிய அணி தரப்பில் பட் கம்மின்ஸ் 4, நதன் லயன் 3, மிட்செல் ஸ்டார்க், ஹசில்வூட், கமரூன் கிறீன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதையடுத்து 279 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. ஆனால், மேட் ஹென்றி, பென் சியர்ஸ் ஆகியோரின் அபார பந்துவீச்சால்




அவுஸ்திரேலிய அணியின் 4 விக்கெட்கள் அடுத்தடுத்து வீழ்ந்தன.

ஸ்ரீவன் ஸ்மித் 9, உஸ்மான் கவாஜா 11, மார்னஷ் லபுஷான் 6, கமரூன் கிறீன் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் என்ற மோசமான நிலைக்கு அவுஸ்திரேலியா தள்ளப்பட்டது.

அதன் பிறகு 5ஆவது விக்கெட்டுக்காக சேர்ந்த டிராவிஸ் ஹெட், மிட்செல் மார்ஷ் ஆகியோர் நிதானமாக விளையாடி மேலும் விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டனர். 3ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 77 ஓட்டங்கள் என்ற நிலையில் உள்ளது. டிராவிஸ் ஹெட் 17, மிட்செல் மார்ஷ் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மேட் ஹென்றி, பென் சியர்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களைச் சாய்த்தனர். இன்னும் 2 நாள் ஆட்டம் எஞ்சியிருந்த நிலையில் மேலும் 202 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நேற்று 4ஆம் நாள் ஆட்டத்தை அவுஸ்திரேலிய அணி தொடர்ந்தது.

ஹெட், 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரை சௌதி வெளியேற்றினார். இருந்தும் அலெக்ஸ் கேரியோடு இணைந்து 140 ஓட்டங்களுக்கு அபார கூட்டணி அமைத்தார் மார்ஷ். 102 பந்துகளில் 80 ஓட்டங்கள் எடுத்த அவர், பென் சியர்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ஸ்ரார்க் ஓட்டம் ஏதும் எடுக்கமால் வெளியேறினார்.

அணித்தலைவர் கம்மின்ஸ் மற்றும் கேரி இணைந்து அபாரமாக ஆடினார். 65 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 281 ஓட்டங்கள் எடுத்தது.

இதன் மூலம் 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கேரி, 98 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். (ஐ)

# இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் மெத்வதேவ் 3ஆவது சுற்றில்

கலிபோர்னியா, மார்ச் 12

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் மெத்வதேவ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தியன்வெல்ஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் டேனியல் மெத்வதேவ் (ரஷ்யா), ராபர்டோ கார்பலேஸ் பேனா (ஸ்பெயின்) உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய மெத்வதேவ் 6-2 மற்றும் 6-3 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.



# மெல்பர்ணில் ஆசியான் 2024 மாநாடு: தென்னாசிய தலைவர்கள் ஆஸியில் சந்திப்பு

ஐங்கரன் விக்கினேஸ்வரா




தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடனான அவுஸ்திரேலியாவின் கூட்டமைப்பானது, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துடனான நட்புறவின் மையமாகும். அவுஸ்திரேலியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகள் தமது பொருளாதாரங்கள் மூலம் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளன.

நிலையான, அமைதியான மற்றும் செழிப்பான ஒரு பிராந்தியத்தை உருவாக்க இக்கூட்டமைப்பு உதவுகிறது. ஐம்பதாண்டு ஆசியான் - அவுஸ்திரேலிய உறவை வலுப்பிக்கும் விதமாக மார்ச் 4-6 மார்ச் 2024இல் மெல்போர்ன் நகரில் "ஆசியான் - அவுஸ்திரேலியா உச்சி மாநாடு" (ASEAN-Australia Summit) நடைபெற்றது.

முதலில் இந்த உச்சிமாநாடு 2021 இல் நிறுவப்பட்ட விரிவான மூலோபாய கூட்டாண்மையின் கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. தொடர்ந்து ஆசியான்-அவுஸ்திரேலியாவின் அடுத்த 50 ஆண்டுகால ஒத்துழைப்பை எதிர்நோக்குவதற்கு தலைவர்களை ஒன்றிணைக்க முயல்கிறது.




இந்த சிறப்பு உச்சி மாநாடு பொருளாதார, காலநிலை மற்றும் தூய்மையான எரிசக்தி மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு முயற்சிகளை வளர்ப்பதற்கு வளர்ந்து வரும் தலைவர்கள் மற்றும் நிபுணர்களை ஒன்றிணைக்க உதவுகிறது.

மூன்று நாள் உச்சிமாநாட்டில் வணிகம், வளர்ந்து வரும் தலைவர்கள், காலநிலை மற்றும் தூய்மையான ஆற்றல் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு ஆகிய முக்கிய விடயங்களை மையமாகக் கொண்ட நிகழ்வுகள் மூலம் மேலும் உறவை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

அவுஸ்திரேலியா, ஆசியானுடன் நீண்டகால உறவு கொண்டுள்ளது. அது ஆசியானுடன் ஆகப் பழமையான கலந்துரையாடல் நாடாகவும் 1974ஆம் ஆண்டு முதல் இருந்து வந்துள்ளது.

**ஆசியான் கூட்டமைப்பு:**

தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (Association of Southeast Asian Nations) என்பது தென்கிழக்காசியாவின் 10 நாடுகளின் பொருளாதார, மற்றும் புவியியல் சார்ந்த அரசியல் கூட்டமைப்பு ஆகும்.

இதனை ஆகஸ்ட் 8, 1967 இல் இந்தோனசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து அமைத்தன. அதன் பின்னர் புரூணை, மியான்மர், கம்போடியா, லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் இக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டன.

பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தல், உறுப்பு நாடுகளிடையே சமூக, மற்றும் பண்பாட்டு உறவுகளைப் பேணல், பிராந்தியத்தில் அமைதி பேணல், உறுப்பு நாடு களுக்கு ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பத்தை வழங்குதல் என்பன இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோள்களில் அடங்குகின்றன.

2007 ஆம் ஆண்டில் ஆசியான் கூட்டமைப்பு தனது 40 ஆவது வருட நிறைவு விழாவையும் ஐக்கிய அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவுகளின் 30 வருடப் பூர்த்தியையும் கொண்டாடியது. 2013 ஆம் ஆண்டளவில் சீனா, ஜப்பான், தென் கொரியா, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதென 26 ஓகஸ்ட் 2007 இல் தீர்மானிக்கப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டில் ஆசியான் பொருளாதார சமூகத்தை நிறுவுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

**அவுஸ்திரேலியா உதவி:**

இந்தச் சிறப்பு மாநாடு முதன்முதலில் 2018ஆம் ஆண்டு இடம்பெற்றது. அது இரண்டாம் முறையாக இவ்வாண்டு நடைபெற்றது. ஆசியான் அமைப்பும் அவுஸ்திரேலியாவும் கடந்த 2021ஆம் ஆண்டு முழுமையான உத்திபூர்வ பங்காளித்துவ அமைப்பை ஏற்படுத்தின. எரிசக்தி உருமாற்றம், ஆட்கடத்தலை முறியடிப்பது ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது இதன் நோக்கம்.

மாநாட்டில் ஆசியான் - அவுஸ்திரேலியத் தலைவர்கள் உறவுகளை வலுவாக்கவும் விரிவுபடுத்துவதும் குறித்து வழிவகைகளை ஆராய்ந்தனர். குறிப்பாக பசுமை, மின்னிலக்கப் பொருளியல் தொடர்பாக என்று கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் தென்கிழக்கு ஆசிய பொருளாதார வியூகத்தின் முக்கிய துறைகள் மற்றும் கருப்பொருள்கள் மீது கவனம் செலுத்தும் "மூர் அறிக்கை" (The Moore Report) திட்டபபடி தென்கிழக்கு ஆசியா இடையே அதிக வர்த்தக முதலீட்டுக்கு மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுடன் பலதரப்பு பேச்சுவார்த்தை நடந்தன.




மெல்பேர்ணில் நடைபெற்ற ஆசியான் விசேட மாநாட்டில் பங்கேற்றுள்ள உலக நாட்டு தலைவர்களுடன் அவுஸ்திரேலிய பிரதமர் பலதரப்பு சந்திப்புகளை நடத்தினார்.

ஆசியான் நாடுகளுடனான பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பிலும் பசுமை மற்றும் காலநிலை சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டுது.

**சிங்கப்பூர் பிரதமருடன் பேச்சுவார்த்தை:**

சிங்கப்பூர் - அவுஸ்திரேலியத் தலைவர்களும் ஆசியான் - அவுஸ்திரேலிய மாநாட்டில் சந்தித்துள்ளனர். இந்த சிறப்பு மாநாட்டில் கலந்துகொள்ள சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் மார்ச் 4ஆம் திகதியிலிருந்து 6ஆம் திகதிவரை மெல்பர்ண் சென்றார்.






அவரது மூன்று நாள் அவுஸ்திரேலிய பயணத்தில் அவர் பிரதமர் ஆண்டனி அல்பனிசைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு நிகழ்வு 2015ஆம் ஆண்டு கையெழுத்தான சிங்கப்பூர் - அவுஸ்திரேலிய முழுமையான உத்திபூர்வ பங்காளித்துவ ஒப்பந்தத்தின்கீழ் இடம்பெறுகிறது.


அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்பின்போது பிராந்திய பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேலைவாயப்பு, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த இருதரப்புச் சந்திப்பில் இருநாட்டுப் பிரதமர்களும் தங்களுக்கு இடையே ஒத்துழைப்பு தொடர்பாகவும், பிராந்திய அனைத்துலக நிலவரம் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறிக்கொள்வர்.

அத்துடன், பிரதமர் லீ ஐம்பதாண்டு ஆசியான்-அவுஸ்திரேலிய கலந்துரையாடல் உறவை நினைவுகூரும் விதமாக ஆசியான் - சிங்கப்பூர் உச்சநிலை மாநாட்டிலும் கலந்துகொள்கின்றார். இதன்போது சிங்கப்பூர் வருமாறு அவுஸ்திரேலிய பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் தாய்லாந்து பிரதமருடனான சந்திப்பின்போது காலநிலை மாற்றம், பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒத்துழைப்புகள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் மலேசிய பிரதமருடனான சந்திப்பின்போது காசா நிலைவரம் பற்றியும் பேசப்பட்டுள்ளது. ●




நாடாளுமன்ற தேர்தல் - 2024

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் அவர்களும் இன்று (9–3–2024) கலந்து பேசியதில், 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் தேர்தல் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வதெனவும்;

வருகிற 2025ஆம் ஆண்டு நடைபெற உள்ள மாநிலங்களவை (Rajya Sabha) தேர்தலில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

(கமல்ஹாசன்)
தலைவர்,
மக்கள் நீதி மய்யம்

(மு.க.ஸ்டாலின்)
தலைவர்,
தி.மு.க.

# திமுக கூட்டணியில் கமல்ஹாசன் செய்த செயல்: மக்கள் நீதி மய்யம் இனி என்ன ஆகும்?

**நந்தினி வெள்ளைச்சாமி**



கடந்த சில தினங்களாக தமிழ்நாடு அரசியல் வட்டாரத்தில் நிலவிவந்த ஒரு ஊகத்திற்கு திமுக முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. திமுக கூட்டணியில் மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு மாநிலங்களவை இடம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணிக்கு மக்கள் நீதி மய்யம் சார்பாக தேர்தல் பரப்புரை மேற்கொள்ளப்படும் என்றும் திமுக தலைமை சனிக்கிழமை அதிகாரபூர்வமாக அறிவித்தது. 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம், ஒரு மாநிலங்களவை சீட்டுடன் முடங்கியது ஏன் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

சமீப காலமாகவே கமல்ஹாசன் காங்கிரஸுக்கு நெருக்கமானவராக இருந்தார். ராகுல் காந்தியின் 'பாரத் ஜோடோ' பயணத்திலும் அவர் கலந்துகொண்டார்.

இந்நிலையில், நடைபெறவிருக்கும் மக்களவை தேர்தலில், காங்கிரஸுக்கு திமுக ஒதுக்கும் இடங்களில் இரண்டு தொகுதிகளை மக்கள் நீதி மய்யத்திற்குக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. அதேநேரம், கடந்த தேர்தல்களில் குறிப்பிடத் தகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய தென்சென்னை மற்றும் கோயம்புத்தூர் தொகுதிகளை கமல்ஹாசன் திமுகவிடம் கேட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஆனால், தங்களின் வலுவான தொகுதியான தென் சென்னையை விட்டுத்தர திமுக முன்வரவில்லை என்றும் அக்கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில்தான், மக்கள் நீதி மய்யத்திற்கு 2025 மாநிலங்களவை தேர்தலில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, மக்களவை தேர்தலில் இக்கூட்டணிக்கு மக்கள் நீதி மய்யம் சார்பில் பரப்புரை மேற்கொள்ளப்படும் என திமுக அறிவித்துள்ளது.

**"தேசத்திற்காக கைகோர்த்துள்ளோம்"**

இந்த ஒப்பந்தம் இறுதியான பின்பு, அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின் கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, இந்த தேர்தலில் மக்கள் நீதி மய்யம் போட்டியிடவில்லை என்றும் மாறாக, இக்கூட்டணிக்கு முழு ஒத்துழைப்பு அளிப்போம் என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்த முடிவு பதவிக்கானது அல்ல என்றும் தேசத்திற்காக கைகோர்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2018ஆம் ஆண்டில் மக்கள் நீதி மய்யத்தைத் தொடங்கிய கமல், அதிமுக, திமுக இரு கட்சிகளையும் விமர்சித்து வந்தார். 2019 மக்களவை தேர்தல், 2021 சட் டமன்ற தேர்தலில் அக்கட்சி போட்டியிட்டது.

மக்களவை தேர்தலில் சுமார் 4 வீத வாக்குகளையும் சட்டமன்ற தேர்தலில் சுமார் 2.5 வீத வாக்குகளையும் பெற்றது. மக்களவை தேர்தலில் கோவை தொகுதியில் சுமார் 1.5 லட்சம் வாக்குகளையும் தென் சென்னை தொகு தியில் சுமார் 1.44 லட்சம் வாக்குகளையும் அக்கட்சி பெற்றது.

சட்டமன்ற தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் கமல், பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசனிடம் சுமார் 1,600 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார்.

**கட்சியை பலப்படுத்த தவறிவிட்டாரா?**

இந்நிலையில் ஒரேயொரு மாநிலங்களவை சீட்டுக்கு கமல் திமுகவுடன் கைகோர்த்தது ஏன் என்ற கேள்வியை அரசியல் ஆலோசகரும் மூத்த பத்திரிகையாளருமான லட்சுமணனிடம் முன்வைத்தோம்.

"ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற கோஷத்து டன் கட்சி ஆரம் பித்தவர் கமல்ஹாசன். அது வெற்று முழக்கமாக இல்லாமல் ஓரளவுக்கு அர்த்தம் இருக்க வேண்டும் என்றால் முதலில் கட்சி கட்டமைப்பு இருக்க வேண்டும். கிராமங்கள் தோறும் கிளைகள் இருக்க வேண்டும். இந்த அடிப்படையான விஷயங்கள் குறித் துத் துளி கூட கமல் கவலைப்படவில்லை. இதில் ஒருசதவீதத்தைக் கூட கமல் செய்யவில்லை.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் அக்கட்சி பெற்ற சுமார் 4 சதவீத வாக்குகள், கமல் என்ற தனி மனிதரின் பிரபலத்திற்கும் அவர் முன்வைத்த புதிய முழக்கத்திற்கா கவும்தான் கிடைத்தது. அதைத் தக்கவைக்க கட்சியைப் பலப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அக்கட்சி அதில் தோற்றுவிட்டது," என்றார்.

இந்தத் தேர்தலில் 1-2 தொகுதிகளை திமுகவிடம் கமல் கேட்டது நிஜம் என்றும் தென்சென்னை தொகுதியில் கமல் உறுதியாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கமல் வசிக்கும் இடம், மேல்தட்டு வகுப்பினர் பெரும்பாலானோர் உள்ள தொகுதி என்ற சாதகம் இருந்தாலும் அந்தத் தொகுதியை திமுக விட்டுக்கொடுக்க முன்வரவில்லை என லட்சுமணன் தெரிவித்தார்.

மகேந்திரன் அக்கட்சியிலிருந்து விலகிய பிறகு கோவையில் அக்கட்சிக்கு தளகர்த்தர் இல்லை என்பதால், அடுத்த வாய்ப்பாக கோவையை கேட்கும் கள யதார்த்தத்தையும் கமல் இழந்துவிட்டார் என அவர் கூறினார்.

'இந்த யதார்த்தமான பலவீனத்தை கமல் புரிந்துகொண்டார் என எடுத்துக்கொள்ளலாம். உதயநிதி உடனான நெருக்கம் இதற்கு ஓர் காரணமாக இருக்கலாம். பரப்புரை செய்வதற்கு ஒரு பலன் இருக்க வேண்டும் என்பதால் ராஜ்ய சபா சீட் கொடுத்திருக்கின்றனர். நிச்சயம் அந்த இடம் கமல்ஹாசனுக்குதான்" என்றார் லட்சுமணன்.

மேலும், 'ஒன் மேன்" கட்சி என்றுகூட மக்கள் நீதி மய்யத்தைச் சொல்ல முடியாது. இதே நிலைமை நீடித்தால் இக்கட்சி மிக விரைவில் காணாமல் சென்றுவிடும். வளரும் ஒரு கட்சியின் எந்த நிர்வாகிக்கும் இந்த முடிவு நிச்சயம் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்காது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கமல்ஹாசனே கட்சியைப் பலவீனப்படுத்தி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்," என்றார்.

**"கிராமங்களை சென்றடையவில்லை"**

கட்சி கட்டமைப்பு பலமாக இல்லை என்பதை ஒப்புக்கொள்ளும் விதமாகவே பேசினார், மக்கள் நீதி மய்யத்தின் மாநில செயலாளர் (ஊடகப்பிரிவு) முரளி அப்பாஸ்.

"கட்சியை ஆக்கபூர்வமாக உருவாக்க வேண்டும். மீண்டும் தேர்தலில் நின்று தோற்று சோர்வடைந்தால், அது தவறான முடிவாக இருக்கும்.

கிராமங்களில் நாங்கள் சரியாகச் சென்றடையவில்லை. அதற்காக தலைவரை அங்கு தெரியவில்லை என்பது



அர்த்தம் இல்லை. ஆதரவை நிர்வாக ரீதியாக இணைக்கவில்லை. தொண்டர்கள் மட்டத்தில் சரியாக இல்லாமல் தேர்தலைச் சந்திப்பதால் ஏற்படும் இழப்புகளை நாங்கள் பார்த்துவிட்டோம்.

இந்த தேர்தலில் தேசிய அரசியலில் மாற்றம் உருவாவதுதான் முக்கியம். எங்களுக்கு தொகுதி ஒதுக்கும் சூழலில் திமுக இல்லை. இந்தச் சூழலில், மாற்றுக் கூட்டணிக்கு செல்ல முடியாது. கமல்ஹாசனின் வலிமையான அரசியல் குரல் விரயமாகக்கூடாது என்பதற்காக இதற்கு ஒப்புக்கொண்டோம்," என்றார் அவர்.

நகரங்களை மையமாக வைத்து சில தொகுதிகளைக் கேட்டதாக அவர் தெரிவித்தார்.

மக்கள் நீதி மய்யம் "ஒன் மேன்" கட்சி என்பதைவிட வலிமையான தலைமை உள்ள கட்சி எனச் சொல்லலாம் என்கிறார் முரளி அப்பாஸ்.

முன்பு திமுகவை விமர்சித்தது குறித்துப் பேசிய அவர், 'பழைய கதைகளைப் பேசக்கூடாது. இந்த அரசை மக்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துவதுதான் நல்லது. காழ்ப்புணர்ச்சியுடன் புறக்கணிக்கக் கூடாது. எங்களின் சுயலாபத்திற்காக இதைச் செய்யவில்லை.

தேசிய நலனுக்காக தளர்த்திக்கொள்வது தாழ்ந்து போவதல்ல, அனுசரித்துப் போவது," என்றார்.

# சீனாவுடனான தனது எல்லையை வட கொரியா வேகமாக மூடுவது ஏன்? என்ன பிரச்னை?

கோவிட் பெருந்தொற்றின்போது வடகொரியா, சீனாவுடனான தனது வடக்கு எல்லையை மூடியது. அதன்பின் சில மாதங்களுக்கு வர்த்தக நோக்கங்களுக்காக அது திறக்கப்பட்டது. ஆனால் தற்போது அந்த எல்லை மீண்டும் மூடப்படுகிறது.

சீனாவுடனான தனது வடக்கு எல்லையை மூடுவதற்கு கோவிட்-19 நேரத்தை வட கொரியா பயன்படுத்தியது.

வடகொரியாவில் மக்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. சீனா மற்றும் வடகொரியா இடையே மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனுடன் சீனாவுடனான வடகொரியாவின் வர்த்தகமும் குறைந்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், வட கொரியாவை தனிமைப்படுத்துவதையும், அங்கு அதிகரித்து வரும் மனிதாபிமான நெருக்கடியையும் முடிவுக்குக் கொண்டுவர உதவுமாறு ஐ.நா. உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சமீப காலமாக, வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன், எல்லை பாதுகாப்பை கடுமையாக அமல்படுத்தி வருகிறார். எல்லையில் மக்கள் நடமாட்டத்தை நிறுத்த கோவிட்-19 காலகட்டத்தைப் பயன்படுத்தினார்.

இருப்பினும், சீனாவுடனான வர்த்தகத்தை அதிகரிக்க சில மாதங்களுக்கு முன்பு இது மீண்டும் திறக்கப்பட்டது.



**82 கி.மீ நீளமுள்ள புதிய வேலி**

இது சம்பந்தமாக, "புல்லட்டை விட வலிமையான பயங்கரவாத உணர்வு: வட கொரியாவின் மூடல் 2018-2023" என்ற அறிக்கையில், கோவிட் -19 தொற்று நோயின் போது மக்களிடம் அதிகப்படியான மற்றும் தேவையற்ற கண்டிப்பு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பான செயற்கைக்கோள் படங்கள், சீனாவுடனான எல்லையில் 482கி.மீ. நீளத்துக்கு வடகொரிய அதிகாரிகள் வேலி அமைப்பதைக் காட்டுகின்றன.



இது தவிர, ஏற்கனவே நிறுவப்பட்ட 260கி.மீ. நீளமுள்ள வேலி மேலும் நீட்டிக்கப்படுகிறது.

எல்லையில் வேலி அமைக்கும் பணியுடன், மக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில், மக்களை சம்பவ இடத்திலேயே சுட்டுக் கொல்ல எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டது.



எல்லையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் 20 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது. காவலர் பணியிடங்களின் எண்ணிக்கை 38-இல் இருந்து 650 ஆக உயர்ந்துள்ளது.

**சீனாவில் வடகொரிய மக்கள் சுரண்டப்படுகிறார்களா?**

சீனாவில் பணிபுரியும் வடகொரியர்கள் பணம் கிடைக்காததால் வன்முறையில் ஈடுபட்டதாக கடந்த மாதம் செய்தி வெளியானது.

ஆயுத உற்பத்திக்காக வடகொரிய அரசுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது என்பது அவரது குற்றச்சாட்டு.

வட கொரிய மக்கள் தங்களது எதிர்ப்புகளை ஒரு போதும் வெளிப்படையாக அறிவிப்பதில்லை, ஏனெனில், அரசாங்கம் அதன் குடிமக்களை இறுக்கமாகக் கட்டுப்படுத்துகிறது மற்றும் பொது மறுப்பு மரண தண்டனைக்குரியது.

வன்முறைச் செய்திகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், வெளிநாட்டில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான வட கொரியர்களின் நல்வாழ்வு குறித்த கவலையை எழுப்பியுள்ளது.

சீனாவில் பணிபுரிந்த வட கொரிய தொழிலாளி ஒருவரிடம் பேசியபோது, அவர் போராட்டம் நடத்தியவர்களின் சம்பளம் நிறுத்தப்பட்டதாகக் கூறினார்.

